வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 07.04.2022 வியாழக்கிழமை | இதழ் : 123 | பக்கங்கள் : 16

# ஆர்ப்பாட்டங்களை இலங்கை அரசு அமைதி முறையில் அணுகவேண்டும்

## ஐ.நா. மனித உரிமை அலுவலகம் வலியுறுத்து



கொழும்பு, ஏப்ரல் 07

**பொருளாதார நெருக் கடிக்கு எதிர்ப்பு தெரிவித்து இடம்பெறும் போராட் டங்களை அமைதியான முறையில் கட்டுப்படுத்தவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலு வலகம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**

எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் அத்தி யாவசிய உணவுப் பொருட் களில் திடீர் தட்டுப்பாடு மற்றும் மோசமான பண வீக்கம், பண மதிப் பிழப்பு மற்றும் மின் வெட்டு போன்றவற்றால் நாட்டின் நிலைமை மோசமாகியுள்ளது.

இது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அடிப்படை பொருட் களைப் பெறுவதில் ஏற் பட்டுள்ள சிரமங்க ளால் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கை மேலும் அதிகரித் துள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் லிஸ் த்ரோசல் தெரிவித்துள்ளார்.

அவசரகால நிலை பிர கடனம், ஊரடங்கு உத்

15

## கடும் உணவு தட்டுப்பாடு மிகவிரைவில் ஏற்படலாம்

### சபையில் கூறினார் சபாநாயகர்

கொழும்பு, ஏப். 07

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார தட்டுப்பாடுகளை தவிர நாட்டில் கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நேற்றுக் காலை பாரா ளுமன்றம் ஆரம்பமாகி விசேட உரையொன்றை ஆற்றியபோதே சபா நாயகர் இதனைத் தெரி வித்தார்.

கடந்த சில நாட்களாக பாரா ளுமன்ற உறுப்பி

15

## நெருக்கடி நிலையை ஆராய மூன்று தமிழர்கள் அடங்கிய குழு!

### ஜனாதிபதி கோட்டாபய அமைத்தார்

கொழும்பு, ஏப். 07

இலங்கையில் தற் போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை ஆராயும் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள் ளார்.

இதில் முக்கிய பொறுப்பு மூன்று தமி ழர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

சமகாலத்தில் ஏற்பட் டுள்ள கடன் நெருக் கடியை நிவர்த்தி செய்து, இலங்கையின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மீட்சிக்கு வழிவகுக்கும் வழி காட்டல்களை வழங்கும் நோக்

15

## ஹர்ஷ டி சில்வாவை ஜனாதிபதி ஆக்குவோம்

### ஹரீன் எம்.பி. சபையில் கோரிக்கை



கொழும்பு, ஏப். 07

நாட்டு மக்கள் தேர் தல் வேண்டுமென கோர வில்லை. ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவே போராட்டம் நடத்துகி றார்கள் என ஐக்கிய மக் கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரி வித்தார்.

கோட்டாபய ராஜ பக்ஷவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொரு ளாதாரம் தொடர்பில் நன்கு கற்ற ஹர்ஷ டி சில்வாவை

15

## அவசரகால சட்டம் நீக்கம் உரிமை கோருகின்றது சு.க.

கொழும்பு, ஏப். 07

“அவசரகால தடைச் சட்டம் நீக்கப்பட்டுள் ளமை யானது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.” என்று பாராளுமன்ற உறுப்பினர் நிமல் சிறி பாலடி சில்வா தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை குறிப் பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதியை நேற்று சந்தித்து பேச்சு நடத்தினோம். ஸ்ரீலங்கா சுதந்

15

## இந்தியாவிடமிருந்து 76000 மெற்றிக் தொன் எரிபொருள் கிடைத்தது

கொழும்பு, ஏப். 07

கடந்த 24 மணிநேரத் தில் இலங்கைக்கு 76,000 மெற்றிக் தொன் எரி பொருட்கள் இந்தியாவி னால் வழங்கப்பட்டுள்ள தாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 36,000 மெற்றிக்

15

## சட்டமா அதிபருக்கு எதிராக விரைவில் குற்ற பிரேரணை

### விஜயதாஸ ராஜபக்ஷ அதிரடி



கொழும்பு, ஏப். 07

சட்டமா அதிபருக்கு எதிராக குற்றப்பிரே ரணை கொண்டுவரப் படும் என்று பாராளு மன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

நாட்டின் தற்போ தைய நெருக்கடி நிலை தொடர்பில் பாராளுமன்றத் தில் நேற்று நடை

15

## ஜோன்ஸ்டனின் அலுவலகம் முற்றுகை!



கொழும்பு, ஏப்.07

தவறான பொருளாதார நெருக்கடியின் மூலம் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளிய பொதுஜன பெர முன அரசாங்கம் பதவி விலக வேண்டுமென வலி யுறுத்தி குருநாகலில் நேற்று பிரமாண்ட ஆர்ப்பாட்டம் நடந்தது.

அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோவின் தேர்தல் மாவட்டமாக குருநாகலில் இந்த ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

15

## 40 மருந்து வகைகளுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு

கொழும்பு, ஏப்..07

நாட்டிலுள்ள அரச வைத்தியசாலைகளில் தற்போது 40 வகையான மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மருந்து உற்பத்திகள், விநியோகம் மற்றும் கட்டுப்பாடுகளுக்கான இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் 60 வகையான மருந்துகள் ஒரு வாரம்

15

## இப்படியும் நடக்கிறது...!

நாடு முழுவதும் ஆங்காங்கே தொடர் போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. போராட்டத்தில் கலந்து கொள்கின்றவர்களின் ஒட்டுமொத்த கோரிக்கை, இந்த அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்பதாக மட்டுமே இருக்கின்றது.

அரசாங்கம் உடனடியாக பதவி விலகவேண்டும் என்றும், உரியவர்களிடம் பதவியைக் கொடுக்கவேண்டும் என்றுமே மக்கள் கோஷமிடுவது நாடுமுழுவதிலுமிருந்து கேட்கின்றது.

ஆக, உரியவர்களிடம் என்றால், யார் அந்த உரியவர்கள் என்று கேட்டால் எவரிடமும் பதில் இல்லை.

அண்மையில் எமது பிராந்திய ஊடகவியலாளர்களிடம், இவ்வாறு போராட்டம் நடாத்துபவர்களிடம் சில கேள்வி களைக் கேட்கச் சொன்னோம்.

உங்கள் கோரிக்கை என்ன? என்று கேட்டால், எல்லோ ருமே சொல்லி வைத்ததுபோல, இந்த அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்கிறார்கள். அரசு பதவி விலகினால் என்ன நடக்கும் என்றால், பெரும்பாலானவர்களுக்கு அதுபற்றிய தெளிவு இருப்பதாக தெரியவில்லை.

யாரும் பதவியை ஏற்க முன்வரவில்லையே? என்றால், அவர்களும் விழிக்கிறார்கள்.

இதுதான் போராட்டக்காரர்களின் நிலை. உண்மையில், அவர்கள் துன்பம் தாங்கமுடியாமல் வீதிக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு கணமும் பிரச்னைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பதால், வீதிக்கு வருவதைவிட அவர்களிடம் வேறு தேர்வு இருக்கவில்லை. ஆனால், மக்கள் எதிர்பார்ப்பதுபோல, இந்த அரசாங்கம் வீட்டுக்கு போனாலும், யார் அடுத்து பதவியை ஏற்பது என்பதில் நாட்டில் தொடர்ந்து இழுபறியே இருக்கின்றது.

ஆளும் பொதுஜனமுன்னணி தனது சாதாரண பெரும் பான்மையைக்கூட எந்த நேரத்திலும் இழந்துபோகலாம். ஆனாலும், பாராளுமன்றில் இன்று அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் பொதுஜன முன்னணி தவிர்ந்த மற்றைய வர்கள் சிறுபான்மையாக இருந்தாலும், அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வந்தால், சில வேளைகளில் பொதுஜன முன்னணியிலிருந்தும் பின்வரிசை உறுப்பினர் கள் பலர் ஆதரவு வழங்கலாம்.

இல்லையெனில், பொதுஜனமுன்னணியே ஆட்சியைத் தொடர்வதைத் தவிர, வேறு மார்க்கம் இருப்பதாக தெரியவில்லை.

இதேவேளை, மக்களின் போராட்டங்கள் இப்படியே போனால், சில நாட்களில் அவை நீர்த்துப்போகலாம் என்றும் இன்றைய ஆட்சியாளர்கள் கணக்குப் போடலாம்.

ஆனால், நாடு சகஜ நிலைக்கு திரும்பவேண்டுமானால், மின்தடை நிற்கவேண்டும். எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு என்பன எல்லாம் இல்லாமல் போக வேண்டும். இந்தியாவின் உதவி வெறும் ஆறு வாரங்களே தாக்குப்பிடிக்க போதுமானவை. ஆறு வாரம் என்பது நாளை வந்துவிடும். அடுத்து என்ன என்பதற்கு யாரிடமும் பதில் இருப்பதாக தெரியவில்லை.

ஆட்சியிலுள்ளவர்களின் ஒரே குறிக்கோள், எப்படி இந்த மக்கள் போராட்டங்களை எதிர்கொள்வது என்பதிலேயே இருந்துகொண்டிருக்கின்றது. அதேபோல எதிரணியினரின் ஒரே நோக்கம், எப்படி இந்த அரசை வீட்டுக்கு அனுப்பு வது என்பதில்தான் இருந்துகொண்டிருக்கின்றது.

யாரும் இந்த நெருக்கடியை எப்படி எதிர்கொள்ளலாம் என்பதை யோசிப்பதாக தெரியவில்லை.

டலஸ் அழகப்பெருமா தலைமையில் இடைக்கால அரசு ஒன்றை அமைக்க சிலர் முயற்சி செய்துவருவது குறித்து நேற்றைய தினம் இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன். கொழும்பின் மூத்த ஊடகர் ஒருவர் தெரிவித்த அந்த தகவலை உங்களுடன் பகிர்ந்திருந்தேன்.

அந்த முயற்சி எந்தளவில் இருக்கின்றது என்பதை அறிய, அந்த ஊடகருடன் தொடர்புகொண்டு கேட்டேன். மீண்டும் மஹிந்த அணியைச் சேர்ந்த ஒருவர் தலைமை யில் இடைக்கால அரசு அமைவதை மக்கள் ரசிக்க மாட் டார்கள் என்று டலஸ் பின்வாங்கியதால், அந்த முயற்சி தடைப்பட்டிருப்பதாக சொன்ன அந்த ஊடகர், இவ்வாறு இடைக்கால அரசு வந்தாலும், மக்கள் திருப்தியடைய வில்லை என்றால் அதனால் பயனற்றுப் போய்விடும் என்ற அந்த வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான் என்பதால், இப்போது மஹிந்த அணியில் இல்லாத ஒருவரின் தலைமை யில் இடைக்கால ஆட்சியை அமைக்க முயற்சி நடப்பதாக கூறினார்.

எது நடந்தாலும், அது நாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடந்தால் நல்லதுதான்!

- ஊர்க்குருவி

# ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு பாராளுமன்றத்தால் கூற முடியாது

### சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகு மாறு பாராளுமன்றத்தினால் கோரிக்கை விடுக்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத் தில் ஜனாதிபதி பதவி விலகு வது, புதிய ஜனாதிபதியை பாராளுமன்றத்தின் ஊடாக நியமித்தல் அல்லது இடைக் கால அரசாங்கத்தை அமைப் பது குறித்த யோசனை முன் வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை எனச் சபா நாயகர் கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, பாராளுமன் றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்ப தால், பாராளுமன்ற பெரும் பான்மையுடன் தீர்மானத்தை நிறைவேற்றி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க முடியும் என கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி யிடம் சமர்ப்பிக்கப்பட்டாலும், 52 நாள் ஆட்சிக்கவிழ்ப்பின் போது உயர்நீதிமன்றம் வழங் கிய உத்தரவை சுட்டிக்காட்டி ஜனாதிபதி தீர்மானத்தை புறக் கணிக்க முடியும் என சபா நாய கர் பதிலளித்தார்.

மேலும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஜனநாயக வழிகளில் தீர்க்க வேண்டும் என்றும் ஜனாதி பதியை தெரிவு செய்த மக்களே அவர் தொடர்பாக முடி வெடுக்கவேண்டும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

(அ)

# ‘காவியநாயகன்’ திருப்பாடுகளின் நாடகம் இன்று முதல் 4 நாள்கள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 07

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பிரமாண் டமான அரங்க ஆற்றுகையான ‘காவிய நாயகன்’ திருப்பாடு களின் நாடகம் இன்று 7 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்ப மாகின்றது. தொடர்ந்து 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு இவ்வாற் றுகை இடம்பெறவுள்ளது.

இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட வுள்ள ‘காவிய நாயகன்’ நாட கம் வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக் கும் வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

ஆண்டுதோறும் கிறிஸ்தவர் களின் தவக்காலத்தில் திரு மறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் இவ்வாற் றுகை கொரோனா பெருந் தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மேடை யேற்றப்படவில்லை என்பது டன் கடந்த ஆண்டு ‘களங்கம்’ என்னும் பெயரில் சிறிய அள வில் மேடையேற்றப்பட்டிருந்த மையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு வழமை போல் பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, ஒலி, ஒளிபோன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணி யிலும் நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகை யில் பங்கேற்கின்றார்கள். திரு மறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து மாபெரும் படைப்பாக தயாரித்தளிக்கும் இவ்வாற்றுகையை ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின் றார்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ. மரியசேவியர் அடிகளாரால் 2001ஆம் ஆண்டில் முதன் முத லாக எழுதப்பட்ட ‘காவிய நாயகன்’ திருப்பாடுகளின் நாடகம், ‘மனிதம்’ என்ற தேட லுக்கு பதில் தரும் வகையில் அமைந்துள்ள இயேசுவின் வாழ் வில் அவர் ஒவ்வொரு சந்தர்ப் பத்தையும், கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கி னார் என்பதைக் கூற முனை கின்றது. ‘காவிய நாயகன்’ இதற்கு முன்னதாக 2001, 2004, 2008, 2013 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற் றப்பட்டமை குறிப்பிடத்தக் கது.

(அ)

### ‘ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள்’ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 07

நூலக நிறுவனத்தினால் நிகழ்த்தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 35 ஆவது நிகழ்வாக ‘ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கியங் கள்’ எனும் தலைப்பிலான கலந் துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.

இக்கலந்துரையாடலில் நவாஸ் சௌபி வளவாளராகக் கலந்துகொள்வார். ஒருங்கி ணைப்பாளராக முஹம்மட் சாக்கீர் செயற்படுவார். அனை வரையும் கலந்துரையாடலில் பங்குபற்றி பயனுறுமாறு கோரப்பட்டுள்ளது.

இணைப்பு - https://us02web.zoom.us/j/81415584070

Zoom Meeting ID : 814155840 70.

(அ)

# அவசரகால நிலைமை எதற்கு? தெளிவுபடுத்தவேண்டும் அரசு

### பாராளுமன்றத்தில் சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஏப். 07

நாட்டில் எதற்காக அவசர நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டது என்பதற்கான கார ணத்தை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளி யிட்ட அவர்,

நாட்டில் திடீரென அவசர கால நிலை பிரகடனப்படுத்தப் பட்டது. அதன்பின்னர் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டது. சமூகவலைத் தளங்களும் முடக்கப்பட்டன. இவற்றுக்கான காரணத்தை அரசு தெளிவுபடுத்தவேண்டும்.

நாட்டில் நிதி அமைச்சர் இல்லை, திறைசேரி செயலாளர் பதவி விலகியுள்ளார். ஏன் இந்த நிலைமை? - என்றார். (அ)

# தற்காப்புக் கலை புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 07

இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டில் ஆரம்பமான மகளிருக்கான 3 மாத கால இலவச தற்காப்புக் கலை (கராத்தே) பயிற்சி நெறி வெற்றிகரமாக நிறைவடைந் துள்ளமையால் புதிய பிரிவுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கலந்து கொள்ள ஆர்வமுள் ளோர் மற்றும் விண்ணப்பித் தோர் ஆண் பெண் இரு பாலரும் 2022.04.20 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில் வடக்கு மாகா ணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறும் கலந்துரையாடலில் அவசியம் கலந்து கொள்ளு மாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
07.04.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## துணிவு மிக்க தமிழ் மக்கள் இருந்தால்?

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் - நான்தான் நீங்கள் தேடிய தலைவன் - இவ்வாறு பெருமிதத்துடன் கூறிய ஜனாதிபதி, கோட்டபாய ராஜபக்ஷவை, வீட்டுக்குச் செல்லுமாறு மக்கள் கோருகின்றனர். இதன் விளைவாக இன்னும் இருபது வருடங்களுக்கு அசைக்க முடியாதென்று கருதப்பட்ட ராஜபக்ஷக்களின் அதிகார மையம் ஆட்டம் கண்டிருக்கின்றது. வரலாற்றில் இது போன்ற கதைகள் வேறு நாடுகளிலும் நடந்திருக்கின்றது. ஒரு காலத்தில் கவர்ச்சிமிக்க தலைவர்களாக தெரிந்தவர்களை மக்கள் மிகவும் சாதாரணமாக தூக்கி வீசிய சம்பவங்கள் பலவற்றை வரலாறு பதிவு செய்திருக்கின்றது. எனவே இதில் ஆச்சரியங்கள் ஏதுமில்லை.

ராஜபக்ஷக்களை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கான பணியாற்றியவர்கள் பலர் தற்போது செய்வதறியாது, தடுமாறிப் போயிருக்கின்றனர். ஆதரித்தவர்கள் பலரே வீதிக்கும் வந்திருக்கின்றனர். இதன் விளைவாகவே, அரசாங்கம் சாதாரண பெரும்பான்மையையும் இழந்திருக்கின்றது. ராஜபக்ஷக்களின் கண்களுக்கு முன்னாலேயே, அவர்கள் தொடர்பான பிரமாண்டமான விம்பங்கள் உருக்குலைந்து போகின்றன. அதிகாரத்தின் உச்சியிலிருக்கும் ஒவ்வொரு கட்சிக்கும் - நபர்களுக்கும் இது ஒரு நல்ல படிப்பினை. ஆனாலும் அதிகாரத்தை உச்சமாக அனுபவிப்பவர்கள், வரலாற்றிலிருந்து எதனையுமே, கற்றுக்கொள்ள முயற்சிப்பதில்லை. அது அதிகார வர்க்கத்தினருக்கே உரித்தான நோய். தங்களுக்கு கிடைக்கும் அதிகாரங்கள் எல்லாக் காலத்திலும் தங்களுக்கே சொந்தமானது என்னும் எண்ணத்திலேயே, ஆளும் வர்க்கம் தொழிற்படுகின்றது. இதற்கு அதிகாரத்திலிருக்கும் எவரும் விதிவிலக்கல்ல. தமிழ் அரசியலும் விதிவிலக்கல்ல.

இப்போது சிங்கள மக்கள், தங்களால் அதிகாரத்திற்கு கொண்டு வந்தவர்களையே, வெளியேறுமாறு கோருகின்றனர். தமிழ் மக்களும் இதிலிருந்து கற்றுக் கொள்ளலாம். சாத்வீகப் போராட்டம், ஆயுதப் போராட்டம், பின்னர் மீளவும் ஆரம்பத்திலிருந்த பாராளுமன்ற மிதவாத அரசியல் - என தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இந்த காலத்து அரசியல் நகர்வுகள் எவற்றினாலும், தமிழ் மக்கள் எதனையையும் அடையவில்லை. யுத்தத்தின் காரணமாக, பத்து லட்சத்திற்கு மேற்பட்ட புலம்பெயர் சமூகமொன்று உருவாகியிருக்கின்றது. அவர்களுக்கு நல்ல வாழ்வு கிடைத்திருக்கின்றது. ஆனால் தாயகத்திலிருக்கும் தமிழ் மக்கள், தமிழ் அரசியல்வாதிகளால் எந்தவொரு ஆக்கபூர்வமான நன்மைகளையும் பெறவில்லை.


தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் எந்தவொரு புதிய மாற்றங்களும் ஏற்படவில்லை. தேர்தல் மேடைகளில் சமஷ்டி, வடக்கு-கிழக்கு இணைப்பு, போர்க் குற்றங்கள், இனப்படுகொலை - இப்படியான சொற்களை ஏலம்விடுவதே, தமிழர்களுக்கான அரசியலாக இருக்கின்றது. ஆகக் குறைந்தது, ஒரு பொதுவான வேலைத்திட்டத்திற்குள் ஐக்கியப்படுவதற்குக்கூட, தமிழ் அரசியல் கட்சிகளால் முடியவில்லை. ஒரு இளைய, ஆளுமைமிக்க புதிய தலைமுறை அரசியலுக்குள் வரமுடியவில்லை.

புத்தியுள்ள, ஒவ்வொரு நபரும் அரசியலிலிருந்து ஒதுங்கிச் செல்லவே விரும்புகின்றார். இதனால், எந்த ஆற்றலுமற்ற, வெற்று கோசங்களை முன்னைப்பவர்களே தொடர்ந்தும் தமிழர் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். பணம் உள்ளவர் எல்லாம், தமிழ் தேசிய அரசியலில் கொடி கட்டிப் பறக்கலாமென்னும் இழி நிலை உருவாகியிருக்கின்றது. இந்த நிலைமையை எவ்வாறு மாற்றியமைப்பது? தமிழ் மக்கள் மத்தியிலிருக்கும் பிரயோசனமற்ற அரசியல்வாதிகளை யார் வீட்டுக்கு அனுப்பவது?

சமஷ்டி, வடக்கு-கிழக்கு இணைப்பு, சர்வதேச அழுத்தம் - இப்படியான சொற்களோடு தமிழ் மக்கள் தொடர்ந்தும் திருப்திப்பட்டுக்கொள்ளப் போகின்றனரா? அல்லது, மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக, ஒன்றிணையப் போகின்றனரா? இன்றைய சூழலில் தமிழ் மக்கள் மத்தியில் கேட்கப்படவேண்டிய கேள்வி இதுதான். அரசியல் தீர்வு தொடர்பில் உரத்துப் பேசிவிட்டு, பாராளுமன்றக் கதிரைகளை காப்பாற்றும் ஒரே நோக்கில் செயற்படும், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தொடர்பில் தமிழ் மக்கள் எப்போது தங்களின் இறுதியான முடிவை எடுக்கப் போகின்றனர்?

# ஜே.ஆர்.ஜயவர்த்தன கூறியமை நிதர்சனமாகியுள்ளது!

அலசுவது இராஜதந்திரி



அரசாங்கம் எந்த வேளையிலும் கவிழ்ந்துவிடலாம் என்பது போன்ற சூழ்நிலைகளே வலுப்பெற்று வருகின்றன. அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான இல்லத்துக்கு முன்பாக ஊற்றெடுத்து கடந்த ஒருவார காலமாக நாடு தழுவிய ரீதியில் தற்போது விரிவடைய ஆரம்பித்துள்ளது.

நாட்டில் அரசுக்கு எதிரான மக்களின் வெறுப்புணர்வு எவ்வளவு தூரம் வெளிப்பட்டுள்ளதென்பதை எடுத்துக்காட்டுவதாக ஆளுங்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 42 பேர் மூன்று அணிகளாக சுயாதீனமாக செயல்பட முன்வந்துள்ளனர். பாராளுமன்றில் ஆளுந்தரப்பிலேயே பிரதிபலித்துள்ள இந்த வெறுப்புணர்வு, இன்றைய ஆட்சி தொடர்ந்து நீடிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை அரசாங்கத்திலிருந்து விலகுவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அறிவித்துள்ளார்.

நிலமையை கட்டுப்படுத்த உத்தேச இடைக்கால சபையை உருவாக்கும் விதத்தில் ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் அமைக்கப்பட்ட நான்கு பேர் கோண்ட தற்காலிக அமைச்சரவையில் நிதியமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட அலி சப்ரி தமது சத்தியபிரமாண நிகழ்வு இடம்பெற்று 24 மணி நேரத்தில் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

இன்றைய அரசு தற்போதைய நாட்டு நிலவரம் காரணமாக பதவி துறக்கலாம். அல்லது மக்களால் இன்றைய ஆட்சி கவிழ்க்கப்படலாம். ஆயினும் தற்போதைய அரச தலைமைத்துவத்துக்கு மாற்றீடாக மற்றொரு தலைமைத்துவம் நாட்டில் காணப்படுகின்றதா? என்பது முக்கிய கேள்வியாக இருப்பதோடு புதியவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் எவ்வளவு தூரம் அவர்களால் சீர்கெட்டுள்ள நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்செய்ய முடியுமென்பதே மற்றொரு கேள்வியாக இருக்கின்றது.

1978ஆம் ஆண்டு இலங்கையில் நிறைவேற்று அதிகார ஆட்சிமுறையைக் கொண்ட அரசியலமைப்பு தோற்றம் பெற்றிருந்தது. அன்றிலிருந்து ஆறு பேர் நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளாக வந்துள்ளனர். அவர்களில் முற்றிலும் அரசியல் அனுபவமில்லாத ஒருவராகவே இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளங்குகின்றார்.


இலங்கையின் நிறைவேற்றதிகார ஆட்சி என்பது ஒரு அனுபவமிக்க நல்ல மாலுமியினால் செலுத்தப்படுகின்ற கப்பல் போன்றதாகவே இருக்க வேண்டும். கடந்த காலங்களில் ஜனாதிபதிகளாக பதவி வகித்தவர்கள் போதியளவு அரசியல் அனுபவம் கொண்டவர்களாக இருந்தனர். அவர்களது அரசாங்கங்கள் வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் அரசியல் ரீதியாக பலத்த சவால்களை சந்தித்திருக்கலாம். ஆனால் அன்றைய யுத்த சூழலிலும் இன்றிருப்பது போல மக்கள் எரிபொருட்களுக்காகவோ அல்லது அத்தியாவசிய பண்டங்களை பெறவோ நீண்ட வரிசைகளில் காத்திருக்கவில்லை. நாட்டின் பொருளாதார நிலபரம் கூட இன்றிருப்பது போல மிக மோசமான நிலையை அடைந்திருக்கவில்லை.

இதற்கு காரணம் அன்றைய அரசுகள் சவால்களை சந்தித்த போதிலும் முக்கிய அரச பொறுப்புகள் தகுதியானவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இதனால் அரச தரப்பின் நடவடிக்கைகள் சிக்கலான நிலமைகளை தாக்குப்பிடிக்கக்கூடியவையாக இருந்தன. ஆனால் இன்றைய அரசில் ஒருசிலரைத்தவிர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட பலர் சிறந்த அரசியலறிவோ அல்லது பொருளாதார நிலபரங்களை கையாளும் திறமை படைத்தோராகவோ காணப்படவில்லை.

நீடித்துச்சென்ற வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முக்கிய பங்காற்றியவர் என்பது ஒருபுறமிருக்க அவருக்கு சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய அரசியல் ஒத்துழைபபே அரசியலில் கோட்டாபய காலடி எடுத்து வைக்க துணை புரிந்திருந்தது.

இன்றைய நிறைவேற்றதிகார ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவின் ஊசலாடும் அரச நிர்வாகத்தை நோக்கும் போது முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன பதவிக்கு வந்ததும் பி.பி.சி. நிருபரொருவருக்கு வழங்கிய பேட்டியொன்றே நினைவுக்கு வருகின்றது. அப்பேட்டியின் போது பி.பி.ஸி நிருபரால் ஜே.ஆர் ஜயவர்த்தனவிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி என்னவெனில் நிறைவேற்று அதிகாரத்தில் சகல அதிகாரங்களும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் உங்களுக்குப்பின்னர் ஆட்சிக்கு வரும் ஒருவர் நிறைவேற்றதிகாரங்களை தவறாக கையாண்டால் நாட்டு நிலைமை என்னவாகும்? என்று கேட்டிருந்தார். அதற்குப்பதிலளித்த ஜே.ஆர். ஜயவர்த்தன, இறைவன் தான் இலங்கையை காப்பாற்ற வேண்டுமென கூறியிருந்தார். அன்று ஜே. ஆர் எதனைக் கூறினாரோ இன்று அவர் கூறியது நிதர்சனமாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினையை எளிதாக சமாளிப்பீர்கள்.உங்களின் நிதானப்போக்கால் நன்மை கிடைக்கும். மனத்தெளிவு ஏற்படும்.பங்குச் சந்தை லாபம் தரும். கலைகளில் ஆர்வம் வளரும்.

**இடபம்**
செயல்களில் இது வரை இருந்த தாமதங்கள் அகலும்.பழைய நண்பர்களின் சந்திப்பு உண்டு. மகிழ்ச்சிகரமான நாள். வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு. நட்பு வட்டம் விரியும்.

**மிதுனம்**
சுபநிகழ்ச்சிக்கு தேவையான பணம் கிடைக்கும். அதிர்ஷ்டம் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். பணியாளர்களுக்கு ஊதிய உயர்வும், சலுகைகளும் கிடைக்கலாம்.

**கடகம்**
எதிர்பாராத நன்மையை காண்பீர்கள். நிம்மதியான நாள்.உயரதிகாரிகளின் நெருக்கத்தின் மூலம் நன்மை காண்பீர்கள். உங்களின் பணத்தேவை ஒன்று இன்றைக்கு நிறைவேறும்.

**சிம்மம்**
நிதிநிலை சிறப்பாக இருக்கும். புதிய விஷயம் ஒன்றை கற்பீர்கள்.புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.குடும்பத்தினர் இடையே அன்பும், ஆதரவும் பெருகும்.

**கன்னி**
குடும்பத்தில் ஒருவருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு வரும். பணிபுரியும் பெண்களுக்கு யோகமான நாள். பொறுமை கூடும்.நிதானப்போக்கு மாறி உங்கள் செயலில் வேகம் கூடும்.

**துலாம்**
முன்னேற்றப்பாதையில் சில இடையூறு வந்தாலும் நீங்கும். பணியாளர்கள் பேச்சு, செயலில் கவனத்துடன் இருப்பது நல்லது. வேலையில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**விருட்சிகம்**
உங்களின் முயற்சிக்கேற்ற பலன் நன்கு கிடைக்கும். சமீபத்தில் ஏற்பட்ட கடன் தொல்லை நீங்கும். மனதில் மகிழ்ச்சி கூடும். நல்லோர் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு**
உறவினருடன் ஏற்பட்ட பிரச்சினைகளை இதமாகப் பேசி தீர்ப்பீர்கள். உங்கள் மீதுள்ள மேலதிகாரிகளின் கோபம் தணிய ஆரம்பிக்கும்.சகோதர சகோதரிகளின் ஆதரவு மெல்ல அதிகரிக்கும்.

**மகரம்**
சகோதரர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். நவீன கருவிகளை உபயோகிப்பீர்கள். கற்பனை பயம் வரும். சிறு சிறு கடன் தொல்லை இருந்தாலும் பாதிப்பு இருக்காது.

**கும்பம்**
பிரிந்த நண்பர்களைச் சேர்த்து வைக்கும் முயற்சி பலன் தரும். தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டிய நாள். விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வர்.

**மீனம்**
வழக்கமான பணிகளில் ஏற்பட்ட சுணக்கங்கள் நீங்கும்.அக்கம்பக்கத்தினரிடம் இருந்த கொடுக்கல், வாங்கல் பிரச்சினை அகலும்.பெற்றோர்களின் முயற்சி வெற்றி பெற ஆரம்பிக்கும்.

# தூத்துக்குடி அகழாய்வுப் பணியில் சங்ககால நெல் உமி கண்டெடுப்பு

தூத்துக்குடி, ஏப். 07

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் கிடைத்த முதுமக்கள்தாழியில் இருந்து அதிகளவில் நெல் உமிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மத்திய தொல்லியல் துறை சார்பில்இ ஆதிச்ச நல்லூரில் அகழாய்வுப்பணி கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 3 இடங்களில் 32 குழிகள் தோண்டப்பட்டுள்ளன. 62 இற்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. குடுவைகள், பானைகள், இரும்புப்பொருட்கள், மணிகள் என ஏராளமான தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளன. கடந்த இரு தினங்களுக்கு முன்னர் அகழாய்வுப்பணியில் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த 2 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகழாய்வு நடைபெறும் 3 பகுதிகளில் ஒரு இடம் தாமிரபரணி ஆற்றின் கரையோரம் அமைந்துள்ளது. கடந்த 1902ஆம் ஆண்டு அலெக்சாண்டர் ரியா என்ற ஆங்கிலேயர் அகழாய்வு செய்த இடத்தின் அருகே, இந்த அகழாய்வுப்பணி நடைபெற்று வருகிறது. இந்த



இடத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பெரிய முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாழியில் இருந்து, நெல் உமிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தாழியைச்சுற்றி 100 இற்கும் மேற்பட்ட மண் கலயங்கள், சிறுபானைகள், இரும்பு வாள் ஆகியவை கிடைத்தன. எனவே பழங்காலத்தில் வாழ்ந்த தலைவன்அல்லது போர் வீரனின் தாழியாக இது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இப்பணி விரைவில் நிறைவுற்று அருங்காட்சியகம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# தமிழகத்துக்கு படகு மூலம் தப்பிச் சென்ற நபர் கைது

சென்னை, ஏப். 07

இலங்கையிலிருந்து படகு மூலம் தமிழகத்துக்கு தப்பிச் சென்ற இளைஞர் ஒருவர் தேவிப்பட்டினம் கடலோர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியா - இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினம் அருகே உள்ள கடற்கரை கிராமத்தில் கடந்த மாதம் 11ஆம் திகதி நள்ளிரவில் இலங்கையைச் சேர்ந்த படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இதையடுத்து, குறித்த படகு மூலம் எவரேனும் தமிழகத்திற்கு தப்பிவந்துள்ளனரா? என்பது தொடர்பில், தேவிப்பட்டினம் கடலோர பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


இந்தநிலையில், சேலம் பகுதியில் வைத்து, இலங்கையர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் கிளி நொச்சி - கிராஞ்சி பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தேவிப்பட்டினம் கடலோர பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# தமிழகத்தில் தொழில் ஆரம்பிக்க நிறுவனங்கள் முன்வருகின்றன

## முதலமைச்சர் ஸ்டாலின் பெருமிதம்



சென்னை, ஏப். 07

2030 ஆம் ஆண்டுக்குள் தமிழகம் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக திகழும் என முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் தெரிவித்தார்.

திண்டிவனம் அருகே பெலாங்குப்பம் சிப்காட் வளாகத்தில் காலணித்தொழிற் சாலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி வைத்து உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திண்டிவனம் என்பது விழுப்புரம் மாவட்டத்தின் 2ஆவது பெரிய நகரமாகும். இங்கு தொழிற்சாலையை ஆரம்பித்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த தொழிற்சாலை மூலம் 6 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதனை இந்த பகுதி மக்கள் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

தி.மு.க. ஆட்சி பதவி ஏற்ற இந்த 10 மாத காலத்தில் தமிழ்நாட்டை நோக்கி ஏராளமான தொழில் நிறுவனங்கள் தொழில் ஆரம்பிக்க முன்வந்துள்ளது. அனைத்துத்துறைகளும் சம விகிதத்தில் வளர வேண்டும் என்பதே தி.மு.க.வின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் வெளிப்படையான அரச நிர்வாகம் நடந்து வருகிறது. எனவே தென் மாவட்டங்களிலும் தொழில் தொடங்க நிறுவனங்கள் முன்வரவேண்டும். தி.மு.க. ஆட்சியில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொழில் வளர்ச்சி பெற முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

இது போன்ற திட்டங்களால் 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழகம் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக திகழும் - என்றார். (அ)

# சாதனை முயற்சி வெற்றி பெற்றதால் செயலி மூலம் மின்கட்டணம் கணக்கீடு

## தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்

சென்னை, ஏப். 07

வீடுகளில் மின்கட்டணத்தைக்கணக்கெடுத்து உடனடியாக நுகர்வோருக்கு தெரிவிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட செயலியின் சோதனை முயற்சி வெற்றி பெற்றுள்ளதால் விரைவில் தமிழகம் முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சாரம் 2 மாதத்துக்கு ஒருமுறை கணக்கெடுக்கப்படுகிறது. இதற்காக மின்வாரிய ஊழியர்கள் வீடு, வீடாகச் சென்று கணக்கெடுத்து அதை நுகர்வோர் வைத்துள்ள அட்டையில் எழுதித் தர வேண்டும். மேலும் அந்த விவரங்களை மின்வாரியத்தின் கணினியிலும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இதன் மூலம் சம்பந்தப்பட்ட நுகர்வோரின் தொலைபேசி எண்ணுக்கு மின்கட்டண விவரம், செலுத்தவேண்டிய கடைசி திகதி ஆகிய விவரங்கள் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். இந்நிலையில் இதற்கு மாற்றாக மின்பயன்பாட்டைக் கணக்கெடுத்ததும் உடனடியாக கட்டணத்தைத் தெரிவிக்க மொபைல் செயலியை மின்வாரியம் அண்மையில் அறிமுகப்படுத்தியது.

இந்தச்செயலி மின்பயன்பாட்டைக் கணக்கெடுக்க செல்லும் ஊழியர்களின் கைத்தொலைபேசியில் பதிவிறக்கம் செய்து தரப்படும். அதனுடன் மீற்றரையும் கைத்தொலைபேசியுடன் இணைக்கும் கேபிளும் வழங்கப்படும்.

இதன் மூலம் கணக்கீட்டாளர் மின் பயன்பாட்டைக் கணக்கெடுத்து செயலியில் பதிவிட்டால் உடனே அதற்கான கட்டணம் கணக்கிடப்பட்டு மின்வாரிய அதிகாரி மற்றும் நுகர்வோரின் கைத்தொலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

இந்தச் செயலி பரிசோதனை அடிப்படையில் சில இடங்களில் பயன்படுத்தப்பட்டது. இச்சோதனை வெற்றி பெற்றுள்ளதையடுத்து தமிழகம் முழுவதும் இத்திட்டத்தை விரிவுபடுத்த உள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## வாழ்வு தரும் வார்த்தை



இன்றைய உலகில் உண்மைக்கு என்றுமே செல்வாக்கு இல்லை. யார் எதை சொன்னாலும் அதை ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் எவரிடமும் இல்லை. ஆதலால் தான் உண்மையை எடுத்துச் சொன்ன இயேசுவுக்குக் கிடைத்த பரிசு.

இன்றைய நற்செய்தியில் இஸ்ராயேல் மக்களை நோக்கி "நாமே உன் கடவுள், நமக்கு முன்பாக வேறு தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக" (வி.ப 2:2) என்றார் கடவுள். இவர்கள் கடவுளை விட்டு வேற்றுக் கடவுள்களிடம் சென்ற போது அவர்களை விபச்சாரம் புரிந்த தாகக் குற்றம் சாட்டினர். இத்தகைய பின்னணியைக் கொண்ட மக்களிடம் தச்சன் இயேசு "நானே என்றும் இருக்கும் முழுமுதற் கடவுள்" என்றார். இதைப் பெறாத மக்கள் இயேசு மேல் எறியக்கல் எடுத்தனர். உண்மையை உரைத்தற்கு கிடைத்த பரிசு இது.

இறைமகன் பிதாவின் நினைவிலே நின்ற வாக்கு அந்த வார்த்தை மனிதனாகிப் பேசிய பொழுது வல்லமையுள்ள வாழ் வளிக்கும் வார்த்தையாகவே இருந்தது. எனவே தான் இயேசு "உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" என்றார். (யோவா 11:25) இயேசுவின் சொற்கள் யூதர்களுக்கு புரியாத புதிராகவே இருந் தது. ஏனெனில் ஆபிரகாம் மற்றும் இறைவாக்கினர்கள் எல்லோ ருமே இறந்து விட்டனர். ஆனால் இயேசுவோ தனது வார்த்தை யைக் கேட்பவன் என்றுமே சாகான் என்றார்.

எனவே இந்த தவக்காலம் நம்மை இறைவனோடு இணைக் கும் காலம், எனவே இறைவார்த்தைக்குச் செவிசாய்த்து இறை வார்த்தையை வாழ்வாக்கிக் கொள்வோம்.

- அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.

# ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகவேமாட்டார்

## சபையில் ஜோன்ஸ்டன் திட்டவட்டம்



**கொழும்பு, ஏப். 07**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்த சந்தர்ப் பத்திலும் பதவி விலகமாட்டார் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித் தார்.**

நேற்று பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் -

ஜனாதிபதிக்கு 69 இலட்சம் பேர் வாக்களித்துள்ளனர் என் பதை லக்ஷ்மன் கிரியெல்ல எமது அமைப்பாளருக்கு நினைவு படுத்துகின்றார். ஜனாதிபதி ஒருபோதும் பதவி விலகமாட் டார் என்பதை அரசாங்கம் என்ற விதத்தில் நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம். இதற்கு நாங்கள் முகம் கொடுப்போம் - என்றார். (அ)

## போராட்டக்காரர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 07

ஆர்ப்பாட்டங்களின்போது சில ஆர்ப்பாட்டக்காரர்கள், தீ வைத்தல் மற்றும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளை வித்தல் போன்ற வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருவ தாக பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாகவும், காணொளி ஆதாரங்களில் அடையாளம் காணப்பட்ட மேலும் பலர் எதிர்வரும் காலங்களில் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த முடிந்தபோதும், அவ்வாறு அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த தவறுபவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென வும் எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

எனவே, கலவரம் மற்றும் வன்முறைச் செயல்களில் ஈடுபடவேண்டாம் என அனை வரையும் கேட்டுக்கொள்வதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (அ)




## அரசை எதிர்த்து தனிநபர் மன்னாரில் போராட்டம்!

மன்னார், ஏப். 07

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்று ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகி வீடு செல்லக்கோரி மன்னார் நகர் பகுதியில் தனி நபர் ஒருவர் நேற்றுக் காலை தொடக்கம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தார்.

மன்னார் பிரதான சுற்று வட்டப் பகுதியில் பதா கையை ஏந்தியவாறு இந்த நபர் போராட்டத்தை முன்னெ டுத்தார்.

முகமூடி அணிந்து பதாகையை ஏந்தியவாறு அமைதி யாக போராட்டத்தில் ஈடுபட்டார். (அ)

## அம்பாந்தோட்டையில் இருவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஏப். 07

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இருவர் மர்மமான முறையில் சுட்டுக் கொலை செய்யப்பட் டுள்ளனர்.

அம்பாந்தோட்டை மாமடல பிர தேசத்தில் மாடுகளை அவிழ்த்துச் செல்ல வந்த இருவருக்கும் மாட்டு உரிமையாள ருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அம்பாந்தோட்டை மாமடல பிர தேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி அங்குனகொலபெலஸ்ஸ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத் தின் பேரில் மேற்கொள்ளப் பட்ட விசார ணைகளில் குறித்த இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

இவர்கள் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டபோது கூறியமைபோன்று மாமடல - ரத்னவீர பாலத்துக்கு அருகில் விபத்து ஏதும் இடம்பெறவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர் பில் பல விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (அ)

## அரசமைப்புக்கு அப்பால் சென்று தீர்வை தேடுவதே சாத்தியமானது

### கூறுகின்றார் அநுரகுமார



கொழும்பு, ஏப். 07

தற்போதை அரசியல் நெருக் கடி நிலைக்கு அரசமைப்பில் தீர்வு இல்லை. எனவே, அரச மைப்புக்கு அப்பால் சென்று தீர்வை தேடி, அதனை அரச மைப்புக்குள் உள்வாங்கலாம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் கருத்து வெளி யிட்ட அவர் கூறியவை வரு மாறு:

நிறைவேற்று அதிகாரம் மற் றும் பாராளுமன்ற அதிகா ரத்தை மக்கள் நிராகரிக்கின்ற னர். இதனை நாம் ஏற்கவேண் டும். அதனால்தான் அமைச்சர் கள் பதவி துறக்கின்றனர். ஜனாதிபதி பதவி விலகவேண் டும் என வலியுறுத்துகின்றனர். எனவே, சர்வகட்சி அரசு என்ற பொறிமுறையை மக்கள் நம்ப மாட்டார்கள். அதனை நிரா கரித்துள்ளனர். தற்போது மக் களின் நம்பிக்கைதான் முக்கியம். இந்த ஆட்சி இல்லா விட்டால், மற்றைய தரப்புக்கு ஆட்சி கையளிக்கப்படவேண் டும். ஆக - இந்த பிரச்னைக்கு அரசமைப்பு ரீதியில் தற்போது தீர்வு இல்லை.

எனவே, அரசமைப்புக்கு வெளியில் சென்று தீர்வை தேடவேண்டும். அதற்கான வழி முறைகளை ஆராயவேண்டும். அவ்வாறு கண்டறியும் தீர்வை அரசமைப்புக்குள் உள்வாங்க லாம். அதற்கான யோசனையை முன்வைக்கலாம். அதற்கு மக்கள் ஆணையே சிறந்த வழி. எனவே, மக்களின் விருப்பத்துக் கேற்பவே அரசு அமைக்கப் படவேண்டும் - என்றார். (அ)

## கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை அமெரிக்கத்தூதரகஅதிகாரிகள்பார்வை

கொழும்பு, ஏப். 07

கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் கொடையாளர்கள் மற்றும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முக மாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர் பில் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சி, முகமாலை மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டுக்கு அமெ ரிக்காவிலிருந்து கொடையாளர்களால் நிதியுதவி வழங்கப்பட்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவ னங்களால் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அந்தப் பணியின் முன் னேற்றங்கள் தொடர்பிலும், தொடர்ந்தும் அந்தப் பணியை மேற்கொள்வது தொடர்பிலும் கள ஆய்வைமேற்கொள்வ தற்காகவே இந்தக் குழுவினர் வருகை தந்திருந்தனர்.

முகமாலை மேற்குப் பகுதியில் டாஸ் நிறுவனத் தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணி வெடியகற்றும் மனிதாபிமான பணியை இந்தக் குழுவினர் பார்வையிட்டனர்.

இதன்போது குறித்த பகுதியில் மீட்கப்பட்டும் ஆபத்தான வெடிபொருட்கள் தொடர்பிலும், அதனை அகற்றுவதில் ஏற்படும் சவால்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

இதுவரை அகற்றப்பட்ட கண்ணிவெடிகள், பூரணப்படுத்தப்பட்ட பகுதிகள், மேற்கொள்ளப் படவேண்டிய பகுதிகள், தேவைப்பாடுகள் உள்ளிட்ட விளக்கமும் அவர்களுக்கு வழங்கப் பட்டது.

இந்தக் குழுவினர் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடும் ஊழியர்களையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் கள நிலைமை களையும் பார்வையிட்டனர். (அ)



# ஒட்டுசுட்டான் இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஏப். 07

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் நமசிவாயம் டிலக்சன் (வயது-25 ) நீரில் மூழ்கிப் பலியானார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரதேச செயலாளர் பிரிவின் காதலியார் சம்மணங்குளம் கிராம அலுவலர் பிரிவின் ஏம்பகுளத்தில் நில அளவை திணைக்களத்தினர் நில அளவைப் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது நில அளவைத் திணைக்களத்தின் பணியாளராக பணிபுரிந்து வந்த வித்தியாபுரம் பகுதியைச் சேர்ந்த ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் நமசிவாயம் டிலக்சன் உள்ளிட்ட நான்கு பேர் நில அளவைப் பணியில் ஈடுபட்டனர்.

நில அளவைப் பணிக்காக குளத்தில் இறங்கியபோதே குறித்த இளைஞர் சேற்றில் புதையுண்டு நீரில் மூழ்கி பலியானார்.

கிராம மக்கள் இராணுவத்தினர் இணைந்து சடலத்தை மீட்டனர். சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நிருபமா ராஜபக்ஷ டுபாய்க்கு பறந்தார்

கொழும்பு, ஏப். 07

முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ டுபாய் நோக்கி சென்றுள்ளார் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர் நேற்று முன்தினம் இரவு 10.25 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து எமிரேட்ஸ் விமானத்தில் நாட்டை விட்டு வெளியேறினார்.

பண்டோரா வெளியிட்ட உலகளாவிய ரீதியில் மறைக்கப்பட்ட சொத்துக்கள் அடங்கிய ஆவணங்களில்



நிருபமா ராஜபக்ஷவின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்தியர், தாதியர் போராட்டம்!

## சுகாதாரத்துறை சீர்குலைவதை எதிர்த்து

**கிளிநொச்சி, ஏப். 07**

**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிலைய வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய உதவியாளர்கள் இணைந்து போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.**






இந்த போராட்டம் நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதிவரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரசாங்கத்தின் செயற்பாட்டினால் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு மற்றும், சுகாதாரப் பொருட்களின் தட்டுப்பாடுகளால் சுகாதாரத் துறையை முழுமையாக முன்னெடுக்க முடிவில்லை என்பது தொடர்பான பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய உதவியாளர்கள் என இன மதம் கடந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வைத்தியர், இன்று மருந்து மற்றும் சத்திர சிகிச்சைக்கு தேவையான பொருட்கள்



பற்றாக்குறையாக உள்ளது. இருப்பதைக் கொண்டு மக்களுக்கு சேவையை வழங்கி வருகின்றோம்.

சிக்கனமாக பயன்படுத்துகின்றோம். இந்த நிலை தொடருமானால் வைத்திய சேவையை மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும். இதனால் மக்கள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும்-என்றார். (அ)

# பிரதி சபாநாயகரின் இராஜினாமாவை ஏற்க மறுத்தார் ஜனாதிபதி கோட்டாபய

கொழும்பு, ஏப். 07

பிரதிச் சாபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் இராஜினாமா கடித்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்க மறுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாராளுமன்ற ஜனநாயகத்தை தொடர்ந்தும் பேணுமாறும் ஜனாதிபதி இவரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானத்திருந்தது.இதனைத் தொடர்ந்து பிரதிச் சாபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# படையினரை தாக்கிய பொலிஸார் சரத் பொன்சேகா எம்.பி. கண்டனம்

கொழும்பு, ஏப். 07

மோட்டார்சைக்கிளில் சென்ற இராணுவத்தினர் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலை கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு முன்பாக நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் முன்னெடுத்த இந்தச் செயற்பாடு அவமானகரமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் பேசிய அவர், சீருடை அணிந்திருக்கும் அதிகாரியை இப்படியா நடத்துவது என்றும் கேள்வியெழுப்பினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இடைக்கால நிர்வாகம் மூலம்தான் நிரந்தர தீர்வை நோக்கி நகரலாம்

## எம்.கே.சிவாஜிலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 07

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும்போதுதான் எமக்கான நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று அணிகளும் இவற்றை சாதகமாக பரிசீலிக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வட்டிதுறையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் கோரிக்கையின்படி காபந்து அரசாங்கத்தை பிரதான எதிர்க்கட்சிகள் உட்பட பல கட்சிகள் நிராகரித்துள்ளன. இந்தச் சூழலின் பின்னணியில் தான் தமிழ் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை நாங்கள் ஒரு உறுதியான இறுக்கமான தீர்மானத்துக்கு வரவேண்டியவர்களாக இருக்கின்றோம். வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கவேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும்போதுதான் எமக்கான நிரந்தர தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று அணிகளும் இவற்றை சாதகமாக பரிசீலிக்க வேண்டும்-என்றார். (அ)

# அமைச்சரவையில் இனிமேல் இடம்பெறாது சுதந்திரக் கட்சி

## ஜனாதிபதியின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 07

**மீண்டும் அமைச்சரவை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிராகரித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும், முன்னாள் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கு கட்சி எடுத்த தீர்மானத்தை மாற்ற முடியாது எனவும், மக்களின் கோரிக்கையை நிராகரிக்க முடியாது எனவும் தமது கட்சியின் பாராளுமன்ற குழு ஜனாதி பதியிடம் தெரிவித்துள்ளனர் என நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்கு தீர்வு காணும் திட்டத்தை முன்வைக்குமாறும் அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலை மையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தம் செய்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும்-என்றார்.

மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன, ஷான் விஜயலால் டி சில்வா, ஜகத் புஷ்பகுமார, சாமர சம்பத், அங்கஜன் ராமநாதன் மற்றும் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோரும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# ஜனாதிபதி எடுத்த முடிவு சரியானதே!

கொழும்பு, ஏப். 07

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஜனாதிபதியின் முடிவை அரசாங்கம் ஆதரித்தது என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நேற்று நடந்த விவாதத்தில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஏனைய பொதுச் சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சித்ததை அடுத்து, அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தும் வர்த்தமானியை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இரத்துசெய்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாணந்துறைப் பாடசாலையில் இசைக்கருவி திருடியவர் கைது



கொழும்பு, ஏப். 07

பாணந்துறை ஸ்ரீ சுமங்கல மகளிர் வித்தியாலயத்தின் இசை அறையை உடைத்து 500,000 ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இசைக் கருவிகளை நேற்று முன்தினம் இரவு திருடிச் சென்ற நபரொருவரை பாணந்துறை தெற்கு பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு இசையறையின் பின்பக்க ஜன்னலை உடைத்து பல இசைக்கருவிகளை திருடியதாக இசை ஆசிரியர் வழங்கிய முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் 34 வயதான பாடசாலையின் பின்புறத்தில் வசிக்கும் நபர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# புத்தாண்டை முன்னிட்டு கைதிகளுக்கு சலுகை!

கொழும்பு, ஏப். 07

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலப் பகுதியில் சிறைக்கைதிகள் தமது உறவினர்களைச் சந்திப்பதற்கு விசேட சந்தர்ப்பமொன்றை வழங்குவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஏப்ரல் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு கைதியின் உறவினர்கள் மூவருக்கு அவர்களைச் சந்திக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கைதிக்கு போதுமான உணவுப்பொதி மற்றும் இனிப்புகளை வீட்டில் தயாரிக்கப்பட்ட பைகளில் கொண்டு வர உறவினர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைக் கைதியின் உறவினர் அல்லது கைதியால் பரிந்துரைக்கப்பட்ட தனி நபர், மாதாந்த வைப்புத் தொகையான ரூ.2,000 தவிர, பண்டிகைக் காலத்தில் சிறைச்சாலை உணவு விடுதியில் கூடுதலாக ரூ.1,000 ஒருமுறை வைப்புத் தொகையாகச் செலுத்த அனுமதிக்கப்படுவர்.

கைதி ஒருவருக்கு போதுமான பால்மா, சீனி, இனிப்புகள் மற்றும் சுகாதார பொருட்களை வாங்கலாம்.

மேலும், வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொதியை எடுத்துச் செல்ல முடியாதவர்கள் அதற்குப் பதிலாக சிறைச்சாலை உணவகத்திலிருந்து வைப்பு செய்யப்பட்ட பணத்தில் ஒன்றை வாங்க முடியும் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# அனுரகுமாரவின் வாகனத்தில் சென்ற ஹெல்மெட் நபர் யார்?

## அலறுகின்றது அரச தரப்பு



கொழும்பு, ஏப். 07

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க பயணித்த வாகனத்தில் ஹெல்மட் அணிந்தபடி பயணித்தவர் யார் என்பதை உடனடியாகக் கண்டறியுமாறு சபாநாயகர் மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதாக அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் யார், எங்கு இறங்கினார் என்பதைக் கண்டறிய அனைத்து சி.சி.ரி.வி காட்சிகளையும் பெற வேண்டும் என்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடா கோரிக்கை விடுத்தார்.

முன்னதாக நேற்று பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது, மிரிஹான சம்பவத்தின் பின்னணியில் ஜே.வி.பி இருந்ததாகவும், சம்பவம் நடந்த இடத்துக்கு சென்ற ஜே.வி.பி. தலைவர் அநுரகுமாரவின் வாகனத்தில் ஹெல்மட் அணிந்த ஒருவர் ஏறிச்சென்றதாகவும் அரச தரப்பு குற்றம்சாட்டியது.

எனினும்,இந்த குற்றச்சாட்டை நிராகரித்த அநுரகுமார, தனது பாதுகாப்பை உறுதி செய்யும் உரிமை தனக்குள்ளதாகவும், ஏதேனும் விசாரணை நடத்தப்பட்டால் தனது பாதுகாவலர்கள் அதற்கு முன்னிலையாவார்கள் என்றும் கூறினார். (அ)

# பாராளுமன்றத்தைக் கலைக்க ஆளும்தரப்பினர் கடும் முயற்சி

## சாணக்கியன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 07

பாராளுமன்றத்தைக் கலைக்கும் நோக்குடனேயே ஆளும்தரப்பினர் பாராளுமன்றத்தில் செயற்பட்டு வருகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றச்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி எதிர்கட்சியினர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் நேரலையாக காண்பித்த இரா.சாணக்கியன் இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

அத்துடன், 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகவேண்டும் என ஆளும் தரப்பினர் குறிப்பிடப்படுகின்றனர். எனினும் பதவி விலகவேண்டியது 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் அல்ல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அமெரிக்க டொலர் 308 ரூபா!

கொழும்பு, ஏப். 07

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணயமாற்று விகிதத்தின்படி, அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதி 308 ரூபா 49 சதமாக அதிகரித்துள்ளது.

டொலரின் கொள்முதல் பெறுமதி 298 ரூபா 10 சதமாக பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 327 ரூபா 70 சதம், விற்பனை பெறுமதி 339 ரூபா 07 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 390 ரூபா 15 சதம், விற்பனை பெறுமதி 404 ரூபா 71 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபா 40 சதம், விற்பனை பெறுமதி விற்பனை பெறுமதி 2 ரூபா 50 சதமாக பதிவாகியுள்ளது. (அ)

# ரஷ்யா – யுக்ரேன் மோதல்:

# எரிந்துபோன பீரங்கிகளின் மிச்சமும் பிணங்களும்

## யுக்ரேன் நகர வீதிகளில் அழிவின் சாட்சிகள்

■ ஜெர்மி போவன்
பிபிசி செய்திகள், புச்சா

ரஷ்யா கீயவை சுற்றி வளைத்து, அதிபர் வொலோதிமிர் ஸெலென்ஸ்கியின் அரசைக் கைப்பற்றுவதற்காக மேற்கொண்ட முயற்சியில் உருவான முதல் கல்லறைகளில் ஒன்றாக, புச்சாவின் புறநகர் பகுதியிலுள்ள ஒரு மரங்களடர்ந்த சாலை மாறியது.

பிப்ரவரி 24-ஆம் தேதியன்று ரஷ்ய படைகள் யுக்ரேனுக்குள் நுழைந்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு, யுக்ரேன் படைகள் புச்சா நகரத்தின் வழியாக கீயவ் நகருக்குள் நுழைய முயன்ற ரஷ்ய டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களின் நீண்ட வரிசையை அழித்தனர்.

பல யுக்ரேனிய படைகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில், ரஷ்ய படைகளின் முன்னேற்றம் தடுக்கப்பட்டு, அந்த வாகனத் தொடர்வரிசை அழிக்கப்பட்டது.

ரஷ்ய அதிபர் மாளிகையின் முடிவுகளின் ஒரு பகுதியாக, கிழக்கு யுக்ரேனில் நடத்தப்படும் போரில் கவனம் செலுத்தத் தொடங்கியதால், வெள்ளிக்கிழமை அன்று கடைசி ரஷ்ய வீரர்களும் புச்சாவிலிருந்து வெளியேறினார்கள் இதனால் பிபிசி குழுவால் புச்சாவுக்குள் செல்ல முடிந்தது.

### யுக்ரேன் படைகளின் கடுமையான எதிர்ப்பு

ரஷ்யா, மத்திய யுக்ரேனில் அதன் போர் இலக்குகளை அடைந்துவிட்டதாகவும் அந்த இலக்குகளில் ஒன்றாக அவர்கள் கீயவை கைப்பற்றுவதை ஒருபோதும் சேர்க்கவில்லை என்றும் ஆதாரமோ நம்பகத்தன்மையோ இல்லாத வகையில், கூறியது.

உண்மை என்னவெனில், எதிர்பாராத விதமாக கடுமையான மற்றும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட யுக்ரேனிய எதிர்ப்பு, ரஷ்ய படைகளை தலைநகருக்குள் நுழைய விடவில்லை. மேலும், அந்த புறநகர் தெருவில் வாகனத் தொடர்வரிசை அழிக்கப்பட்ட இடத்தில் துருப்பிடித்துக் கிடக்கும் போர் வாகனங்கள் அதற்கான சான்றுகளில் ஒன்றாக விளங்குகின்றன.



போர் தொடங்கி இரண்டு, மூன்று வாரங்கள் கடந்தபோது ரஷ்ய படைகள் வேகத்தை இழந்தன. புச்சாவின் தெருவில் அதற்கான காரணத்தை நம்மால் பார்க்க முடியும்.

ரஷ்யாவின் வான்வழிப் படைகளின் உயரடுக்கு படைகள் விமானம் சுமந்து செல்லக்கூடிய வகையில் இருக்கும் இலகுரக கவச வாகனங்களில் நகரத்திற்குள் நுழைந்தன.

படையெடுப்பின் முதல் நாளில் ஹெலிகாப்டர்



மூலம் தரையிறக்கப்பட்ட ரஷ்ய பாராசூட் படைகளால் தாக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட, சில மைல்கள் தொலைவிலுள்ள ஹோஸ்டோமல் விமான நிலையத்திலிருந்து அவர்கள் வந்தனர். அப்போதும்கூட, யுக்ரேன் படைகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பை அவர்கள் சந்திக்க நேர்ந்தது.

கீயவ் செல்லும் வழியில் புச்சா வழியாக வாகனங்களின் அந்த நீண்ட வரிசை நகர்ந்தபோது, அவர்கள் கடும் எதிர்ப்பைச் சந்தித்தனர்.

அந்தச் சாலை குறுகியதாகவும் நேரானதாகவும் இருந்ததால், யுக்ரேன் படைகள் பதுங்கியிருந்து தாக்குவதற்குச் சரியான இடமாக அமைந்தது. துருக்கியில் இருந்து வாங்கப்பட்ட பேரேக்டர் ஆளில்லா தாக்குதல் விமானங்கள் மூலமாக யுக்ரேன் படையினர், வாகனத் தொடர் வரிசை மீது தாக்குதல் நடத்தியதாக சாட்சிகள் தெரிவித்தன. யுக்ரேனிய பிராந்திய பாதுகாப்பு தன்னார்வலர்களும் அந்தப் பகுதியில் இருந்ததாக அங்கிருந்தவர்கள் கூறினர்.

### தப்பியோடிய ரஷ்ய படையின் இளைஞர்கள்

யுக்ரேன் படையினர், ரஷ்ய படைகளின் முன்னணி வாகனங்களையும் அதற்குப் பின்னால் வந்த வாகனங்களையும் தாக்கியதோடு, மற்றவர்களைச் சிறையில் அடைத்தார்கள். 30 மிமீ பீரங்கி குண்டுகளின் பெல்டுகள் புற்களின் மீது கிடக்கின்றன. மேலும் பல ஆபத்தான மற்றும் சேதமடைந்த கைவிடப்பட்ட ஆயுதங்களின் துண்டுகளும் கிடக்கின்றன.

ரஷ்ய படைகளில் கட்டாய ராணுவ சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இளைஞர்கள், அந்தச் சண்டையில் பிடிபட்டபோது யுக்ரேனிய படைகளிடம் தங்களை ஒப்படைக்க வேண்டாமென்று கெஞ்சியதாகவும் பிறகு அங்கிருந்து அவர்கள் ஓடிவிட்டதாகவும் உள்ளூர் மக்கள் கூறினார்கள்.

“அங்கிள் ஹ்ரிஷா” என்று தன்னை அழைத்துக் கொள்ளும் 70 வயதான ஒருவர், “நான் அவர்களுக்காக கவலைப்பட்டேன். 18 முதல் 20 வயதுடைய இளைஞர்களாக அவர்கள் இருந்தனர். அடுத்து வரவுள்ள ஒரு முழு வாழ்க்கையும் அவர்களுக்கு மிச்சம் இருந்தது,” என்கிறார்.

புச்சாவில் இருந்து வெளியேறத் தயாரான ரஷ்ய படைகள் மீது அவ்வாறு யாரும் பரிதாபம் காட்டவில்லை என்பதைப் போல் தெரிகிறது. யுக்ரேனிய படைகள் நகரத்திற்குள் நுழைந்தபோது, குறைந்தபட்சம் 20 பேர் தெருவில் உயிரிழந்து கிடந்தனர். அவர்களில் சிலருடைய கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. 280 பேரை பெரிய புதைகுழிகளில் புதைத்ததாக அந்த நகரத்தின் மேயர் கூறினார்.

### உடைந்து நொறுங்கிய யுக்ரேனின் கனவு விமானம்

அங்கேயே தங்கியிருந்த சில பொதுமக்கள், எரிவாயு, மின்சாரம், தண்ணீர் விநியோகம் அனைத்தும் தடைபட்டதால், அவர்களின் க்ருஷ்சேவ் காலத்து குடியிருப்புகளுக்கு வெளியே விறகு வைத்து தீ மூட்டி சமைத்தார்கள். அந்த மக்கள் ரஷ்ய படைகளைத் தவிர்க்க முயன்றதாகக் கூறினார்கள்.

தன்னார்வலர்கள் மேற்கு யுக்ரேனிலுள்ள லுவீவ் மற்றும் புவியியல் ரீதியாக போரில் இருந்து வெகு தொலைவிலுள்ள நாடுகளில் இருந்து பொருட்களைக் கொண்டு வருகிறார்கள்.

“38 நாட்களில் நாங்கள் சாப்பிட்ட முதல் ரொட்டி இது,” என்று மரியா என்ற பெண், ரொட்டிகள் இருந்த ஒரு நெகிழிப் பையைப் பார்த்தபடி கூறினார். அவருடைய மகள் லாரிசா சோவியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி கட்டடத்தை எனக்குச் சுற்றிக் காட்டினார்.

பாதுகாப்பான பகுதிகளுக்கு அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் பலர் பாதுகாப்புக் கதவுகளைப் பூட்டியிருந்தனர். ஆனால், ரஷ்ய படைகள், காங்க்ரீட் லின்டெல்கள் மற்றும் கதவுக்கான தூண்களையும் அகற்றியதன் மூலம் அந்தக் கதவுகளைத் திறந்தனர்.

சில மைல்கள் தொலைவில், இந்தப் பேரழிவின் தொடர்ச்சி ஹோஸ்டோமல் விமான நிலையம் வரை நீளுகிறது. ரஷ்ய வான்வழி படைகள் அதை கீயவுக்குள் நுழைவதற்கான தளமாகப் பயன்படுத்த முயன்றன. உலகின் மிகப்பெரிய போக்குவரத்து விமானம் தொடக்கத்திலேயே அழிக்கப்பட்டது. அதற்காகக் கட்டப்பட்ட பிரமாண்டமான மேற்கூரை துப்பாக்கிக்



குண்டுகள் தாக்கியதன் அடையாளமாக துளைகளால் நிறைந்திருந்தது. யுக்ரேனிய மொழியில் கனவு(மிரியா) எனப் பெயரிடப்பட்ட அந்த விமானம், உடைந்த பின்புறம், பெரும்பகுதி உருகிய நிலையில், உள்ளன.

உலகமெங்கும், பெரிய திட்டங்களை உருவாக்கும் யுக்ரேனின் திறனுக்கான அடையாளமாக, பெரியளவிலான தேசிய பெருமையோடு இந்த விமானத்தில் முதலீடு செய்யப்பட்டது. அந்த விமானம் தற்போது, யுக்ரேனுக்குள் என்ன நடக்கிறது என்பதற்கான உவமையாக விளங்குகிறது.

# “எங்களை ஒன்றுசேர்த்த கோட்டாபயவுக்கு நன்றி”

“எங்களுடைய இன்னல்களை சிங்கள மக்கள் தற்போது தான் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அனைத்துத் தரப்பினரையும் கோட்டாபய ஒன்று சேர்த்திருக்கிறார். அவருக்கு நன்றி“ என கொழும்பில் வசிக்கும் தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், நாடு முழுவதும் போராட்டங்கள் நாளுக்கு நாள் வலுப் பெற்று வருகின்றது.

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் 24 மணிநேர போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதை காண முடிகின்றது.

பெரும்பாலான பகுதிகளில் இளைஞர், யுவதிகளே போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கொழும்பில் வாழும் தமிழர்கள் சிலர் நேற்று முன் தினம் இரவு போராட்டத்தை நடத்தியிருந்தனர். கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தை பகுதியில் இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில், இன, மத பேதமின்றி இலங்கையர்கள் என்ற விதத்தில் அனைத்து தரப்பினரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த முதலாம் திகதி அமல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம், நேற்று முன் தினம் இரவு மீள வாபஸ் பெறப்பட்டுள்ளது.




## போராட்டக் களத்தில் ஒலித்த குரல்




எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக தொடர்ந்தும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில், கொழும்பு - வெள்ளவத்தை பகுதியில் இளைஞர், யுவதிகள் நேற்று முன் தினம் இரவு போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

ராஜபக்ஷ குடும்பத்திற்கு பயணத் தடை விதிக்க வேண்டும் என சமூக ஆர்வலர் கார்மேகம் தினேஷ்குமார் தெரிவிக்கின்றார்.

“GO HOME GOTA என்ற ஹெஷ் டெக் மூலம் இவங்க விரட்டி அடிச்சா, இங்க நடந்திருக்க திருட்டுக்களுக்கு, களவுகளுக்கு யார் பதில் சொல்லுறதுனு தெரியாது. எங்களுக்கு மின்சாரம் இல்ல. குழந்தைகளுக்கு படிக்க முடியாது இருக்கு. முதியோருக்கு தேவையான மருந்துகள் இல்ல. இளைய சமூதாயத்திற்கு தேவையான வேலைகள் இல்ல. இளைய சமூதாயத்திற்கு தேவையான வேலை வாய்ப்புக்களை வழங்கி இந்த நாட்டை ஒரு நிலைமைக்கு எடுத்துக்கொண்டு வர, இவங்க கொள்ளையடிச்ச பணம் கட்டாயம் வெளிய வரனும். GO HOME GOTA என்ற ஹெஷ் டெக்கிற்கு விட, ராஜபக்ஷ குடும்பத்தை முழுமையாக தடை விதிக்கனும். நேற்று பதவி விலகுறாங்க. நாளைக்கு நாட்டை விட்டு போயிருவாங்க. சர்வதேச கணக்காய்வு ஒன்றை நாங்கள் கேட்கிறோம். இவங்க கடன் எடுத்து, எப்படியான வேலை செய்தாங்கனு இன்றைக்கு வரை தெரியாது. இது வெளியில வரும் வரைக்கும் ராஜபக்ஷ குடும்பத்திற்கு பயண தடை இருக்கவே வேண்டும்” என கார்மேகம் தினேஷ்குமார் குறிப்பிடுகின்றார்.

இந்த நாட்டில் இளைஞர்களை வாழ விடுமாறு, கோட்டாபய ராஜபக்ஷவிடம், சமூக ஆர்வலர் அபி ராஜேஸ்வரன் கோரிக்கை விடுக்கின்றார்.

“GO HOME GOTA என்பதை விட, STAY HOME GOTA. பேசாம வீட்டிலேயே இருங்க. எங்களுக்கு நீங்க அரசியலுக்கு வந்து செய்யவும், அது எல்லாம் தேவையில்ல. எங்க கிட்ட இருந்து எடுத்த காச எல்லாத்தையும் திரும்ப நாட்டிற்கு கொடுங்க. அதை விட அவருக்கு ட்ரவல் பேன்ட் (பயணத் தடை) பண்ணனும். குடும்பத்தோட அவரு நாட்டை விட்டு போயிட்டு இருக்காரு. எங்கள போல இளைஞர்கள் இப்போ வெளிநாடு போறாங்க. பிரச்சினை இருக்கதால போயிட்டு இருக்காங்க. இப்படி எல்லா இளைஞர் களும் வெளிநாடு போனால், இந்த நாட்டுல யாரு இருக்க போறது. இளைஞர்கள் கிட்ட இருந்து எடுத்தது எல்லாத்தையும் திரும்பி தாங்க. இளைஞர்கள வாழ விடுங்க” என சமூக ஆர்வலர் அபி ராஜேஷ்வரன் தெரி விக்கின்றார்.

அனைத்து இன மக்களையும் ஒன்று சேர்த்தமைக்கான தான் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நன்றி தெரிவிப்பதாக கொழும்பைச் சேர்ந்த அபிலாஷ் விஜயகுமார் குறிப்பிடுகின்றார்.

“சரியான தூர நோக்கு சிந்தனை இல்லாத காரணத்தினால் தான் இலங்கை இன்று இந்த மாதிரியான நிலைமையை எதிர்கொண்டிருக்கு. அது மட்டும் இல்ல. இந்த பிரச்னையால உண்மையில கோட்டாபயவிற்கு நன்றி சொல்லனும். ஏனா நாட்டு மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்திருக்காங்க.

இவ்வளவு நாளா தமிழ் மக்கள தப்பா நினைச்சிட்டு இருந்த எல்லாரும், இப்ப எல்லாம் ஒன்று சேர்ந்திருக்காங்க. சிங்கள மக்களுக்கும் 30 வருஷத்துக்கு முன்னால இருந்து தமிழ் மக்கள்ட குரலுக்கு என்ன நடந்தது, எதனால அவங்க பிரச்சினைகள மேற்கொண்டாங்க என்பது சிங்கள மக்களுக்கு இப்ப தான் தெரிய வந்திருக்கு. அதால எல்லாரும் ஒன்று சேர்ந்திருக்காங்க. இது அப்படியே தொடரும்னு நினைக்கிறோம்” என அபிலாஷ் விஜயகுமார் தெரிவிக்கின்றார். ■

**சரியான தூர நோக்கு சிந்தனை இல்லாத காரணத்தினால் தான் இலங்கை இன்று இந்த மாதிரியான நிலைமையை எதிர்கொண்டிருக்கு. அது மட்டும் இல்ல. இந்த பிரச்னையால உண்மையில கோட்டாபயவிற்கு நன்றி சொல்லனும். ஏனா நாட்டு மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்திருக்காங்க.**





# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |
| 60. | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

## கல்வி tv CHANNEL-1

**07.04.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**07.04.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# எரிபொருள் நிலையங்களுக்கு முன்னால் இரவு, பகல், அதிகாலையில் குவியும் மக்கள்

## இதனால் பல்வேறு நெருக்கடிகள்

மட்டக்களப்பு, ஏப். 07

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருள் நிலையங்களில் இரவு பகல் மற்றும் அதிகாலை வேளைகளில் அதிகளவில் மக்கள் குவிவதனால் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

நாட்டில் நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாடுகள் தொடர்ந்தும் அவ்வாறான நிலையிலேயிருந்துவருவதன் காரணமாக எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக குவியும் வாகனங்கள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன.



மட்டக்களப்பு நகரில் உள்ள எரிபொருள் நிலையங்களில் எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக இரவு வேளைகளிலும் அதிகாலை வேளைகளிலும் பெருமளவான வாகனங்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை காணமுடிகின்றது.

மட்டக்களப்பில் ஒரு சில எரிபொருள் நிலையங்களிலேயே எரிபொருள் விநியோகங்கள் நடைபெறுவதால் மக்கள் குவியும் நிலை காணப்படுகின்றது.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் எரிபொருள் விலையேற்றம் ஏற்படும் என்று மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரசாரங்கள் காரணமாக இவ்வாறு எரிபொருள் நிலையங்கள் தொடர்ச்சியாக மக்களால் நிரம்பி வழிவதாக எரிபொருள் நிரப்பு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# வறுமையின் பிடியிலும் வரியை கோருகின்றனர்

திருமலை, ஏப். 07

நாட்டின் இக்கட்டான சூழ்நிலைகளை கவனத்திற் கொள்ளாது, இறைவரித் திணைக்களத்தின் கிழக்கு மாகாண காரியாலயத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் நடமாடும் சேவைகள் மூலமாக தாம் பல்வேறு இன்னல்களைத் தினம் சந்தித்து வருவதாக, பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிரந்தர மின்சார மின்மை, எரிபொருள் பிரச்னைகள், அன்றாட வாழ்வியலில் பொதுமக்கள் சந்திக்கும் சிக்கல்கள் காரணமாக அநேக பொதுமக்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வுகள், பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் தொழிலில்லா நிலைகள் உள்ள இந்தக் காலகட்டத்திலும் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தால் வரி அறவிடுதல் எனும் போர்வையில் மனச்சாட்சிக்கு விரோதமான பல வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ந்துள்ள இந்தக் காலகட்டத்தில் இறைவரி அறவிடல்களை செய்து, உள்ளூராட்சி மன்றங்களைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் இறைவரி திணைக்கள அதிகாரிகள், ஏழை மக்களின் பசியையும் வாழ்வாதார நிலைகளையும் கவனத்திற்கொள்ளாது செயற்படுகிறார்கள் என மக்கள் சாடுகின்றனர்.

எனவே, இந்த வரி அறவிடும் வேலைத் திட்டத்தை நாடு சீராகும்வரை பிற்போட கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், இறைவரி திணைக்கள ஆணையாளர் உட்பட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# தேசிய அரசு தீர்வாகாது!

மட்டக்களப்பு, ஏப். 07

கட்சி பேதங்களுக்கப்பால் நாடு முழுவதும் நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இடைக்கால அரசோ, தேசிய அரசோ தீர்வாகாது என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம் மஹ்தி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அரசியல்வாதிகள், மாணவர்கள், பொதுமக்கள் என சகல தரப்பினரும் நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க முடியாத நிலையில், அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் இரவு - பகல் பாராது மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டக் காரர்களை திருப்திப்படுத்தும் நோக்கில், மத்திய வங்கி ஆளுநர் உட்பட அமைச்சர்களும் பதவி விலகி, இடைக்கால அரசாங்கத்தை அல்லது தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதியின் முயற்சி நடைபெறுகின்றது.

ஆனாலும், நாட்டு மக்களோ ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் உட்பட அனைவரும் பதவி விலகுவதோடு, தேர்தல் ஒன்றின் மூலம் ஊழல்வாதிகள், சந்தர்ப்பவாதிகள், கடும்போக்கு வாதிகள் இல்லாத சிறந்த பொருளாதார, சிந்தனை வாதிகளை உள்ளடக்கிய புதிய அரசாங்கம் ஒன்றையே எதிர்பார்க்கிறார்கள்.

கடந்த ஆட்சிக்காலங்களில் நடந்தேறிய ஊழல்களுக்கு எதிராக மிகத் தீவிரமான விசாரணைகளை நடத்தி, அவர்களால் கொள்ளையிடப்பட்ட அனைத்து சொத்துகளையும் பறிமுதல் செய்து, நாட்டின் தேசிய சொத்துகளாக்கக் கூடியதாக புதிய அரசாங்கமாக அமைய வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள் - என்றுள்ளது. (அ)

# பொறிக்கப்பட்ட விலையைவிட கூடுதல் விலையில் பொருள்கள்

அம்பாறை, ஏப். 07

அம்பாறை மாவட்டத்தில் சில வர்த்தக நிலையங்களில், அத்தியவசியப் பொருள்களில் பொறிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக, அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை சாதகமாக பயன்படுத்தி, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு அத்தியவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் முறையிட்டுள்ளனர்.

பொருள்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து கூடுதல் விலைக்கு பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு, அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (அ)



# றமழான் மாதத்தில் பொருள்கள் வழங்கல்

மட்டக்களப்பு, ஏப். 07

றமழான் மாதத்தை யொட்டி, அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கோப் பிறஸ் பல்பொருள் விற்பனை நிலையத்தின் ஊடாக, பொதுமக்களுக்கு முன்பாக அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

றமழான் பொதி வழங்கல் விசேட வேலைத்திட்டத்துக்கு அமைவாக, அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கும் நிகழ்வு, நேற்று முன் தினம் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி, அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.பி.ஏ.ஹமீட், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.சி.ஜலால்டீன், எஸ். ஜாபீர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பொதிகளை வழங்கினர்.

பால்மா, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய குறித்த பொதி, பொதுமக்கள் நன்மையடையும் வகையில், பழைய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 35 அபிவிருத்தி உத்தியோகத்தர் கிழக்கு மாகாணத்தில் நியமனம்!

மட்டக்களப்பு, ஏப். 07

கிழக்கு மாகாணத்தில் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், தேசிய பாடசாலை மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு 235 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஏ.மன்சூர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண அமைச்சுக்கள், மாகாண திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்காக 140 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், தேசிய பாடசாலைகளுக்கு 34 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், மாகாண பாடசாலைகளுக்கு 61 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 31 பேரும், அம்பாறை மாவட்டத்திற்கு 30 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

313 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வும் இடம்பெற்றது. அதில் 75 பேர் திணைக்களங்களுக்கும், 238 பேர் பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படவுள்ளனர் - என்றார். (அ)

# வாழைச்சேனையில் இரு இளைஞர்கள் 3100 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது!

மட்டக்களப்பு, ஏப். 07

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனானை மியான்குளம் பகுதியில் வைத்து 3100 கிராம் கேரளக் கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே 3100 கிராம் கேரளக் கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் புனானை மியான்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில் இருந்து மட்டக்களப்பு பகுதிக்கு கஞ்சாவை இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்துள்ளனர். இவர்கள் புனானை மியான்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் தொடர்புடைய வியாபாரிகள் வேறு யாராவது இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு



# ஐ.நா. சபையிலிருந்து ரஷ்யாவை விலக்குக!

கீவ், ஏப்.07

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் இருந்து ரஷ்யாவை நீக்க வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி வொலாடிமிர் ஸெலென்ஸ்கி கோரிக்கை விடுத்தார்.

ஐ.நா. பாதுகாப்புச்சபையின் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் காணொளி மூலம் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

உக்ரைனில் ரஷ்ய படைகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புச்சபைக்கு அவர் விளக்கமளித்தார்.

ரஷ்ய படையினால், உக்ரைனியர்கள் கொல்லப்பட்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்ற நிலையில், ரஷ்யா பொறுப்புக்கூறலுக்கு உள்ளாகவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதேநேரம், ரஷ்யாவில் அனைத்து புதிய முதலீடுகளையும், அமெரிக்க தடை செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சூடான் ஆயுதக் குழு தலைவர் மீது போர்க்குற்ற விசாரணை ஆரம்பம்!

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில்

ஹேக், ஏப். 07

சூடானில் 20 ஆண்டுகளுக்கு முன்பு போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படும் அந்த நாட்டு ஆயுதக் குழு தலைவர் அலி முகமது அப்துல் அல்-ரஹ்மான் மீதான வழக்கு விசாரணை நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (International Criminal Court) கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது.




கடந்த 2003-ஆம் ஆண்டில் சூடானைச் சேர்ந்த பழங்குடியினர் அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.. அதனை அடக்குவதற்காக சூடான் அரசு அவர்கள் மீது கடுமையான வான்வழித் தாக்குதல் நடத்தியது.

அத்துடன், அரசுக்கு ஆதவாக செயல்பட்டு வந்த அல்-ரஹ்மான் தலைமையிலான ஜன்ஜாவிது ஆயுதக் குழுவினர் பழங்குடியினர் கிராமங்களுக்கு அதிகாலை சென்று தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது.

கொலை, கொள்ளை, பாலியல் தாக்குதல், சித்திரவதை ஆகியவற்றில் அல்-ரஹ்மானின் ஆயுதக் குழு ஈடுபட்டதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக அல் - ரஹ்மான் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஐ.நா. பாதுகாப்பு சபையில் கடந்த 2005ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, தற்போது வழக்கு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதில் பங்கேற்ற அல் - ரஹ்மான், தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அனைத்தையும் மறுப்பதாகக் கூறினார். (அ)

# ருமேனியாவில் ரஷ்ய தூதரகம் மீது காரை மோதி வெடிக்கச்செய்த நபர்!

## விசாரணைகள் ஆரம்பம்



புக்கரெஸ்ட், ஏப். 07


ருமேனியாவில் ரஷ்ய தூதரகம் மீது மர்ம நபர் ஒருவர் காரை மோதி வெடிக்கச்செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த நபர் யார், இது விபத்தா அல்லது திட்டமிட்ட சம்பவமா என்பன தொடர்பான விசாரணைகள் தொடங்கியுள்ளன.

உக்ரைனின் அயல்நாடு ருமேனியா. உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதலுக்குப் பின்னர் ருமேனியாவுக்கு மட்டும் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை அதிகாலையில் ருமேனிய தலைநகர் புக்கரெஸ்டில் உள்ள ரஷ்ய தூதரகம் வாயில் கதவில் அதி வேகமாக வந்த கார் ஒன்று மோதியது. இதில் காரில் இருந்த நபர் உயிரிழந்தார். மோதிய வேகத்தில் கார் தீப்பிடித்ததால், அங்கிருந்த வாயில் கதவு எரியத் தொடங்கியது. தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இருப்பினும் ரஷ்ய தூதரகத்தில் வாயில் கதவு சேதமடைந்தது. காரில் வந்த நபரும் உடல் கருகி இறந்தார்.

இந்நிலையில்இ இந்த சம்பவம் விபத்தா, இல்லை திட்டமிட்ட தாக்குதலா என்ற விசாரணைகளை ருமேனிய அரசு முடுக்கிவிட்டுள்ளது. உக்ரைன் மீதான தாக்குதல் தொடங்கியதிலிருந்தே ரஷ்ய தூதரகங்கள் முன்னால் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், தாக்குதல்கள் உலகில் வாடிக்கையாகிவிட்டது. அதுவும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் உள்ள ரஷ்ய தூதரகங்கள் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

அண்மைக்காலமாகவே ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தங்கள் தேசத்தில் உள்ள ரஷ்ய தூதரக அதிகாரிகளை திருப்பியனுப்பி வருகின்றன. சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு ரஷ்யா போரை நிறுத்தாததைக் கண்டித்து அந்நாடுகள் இத்தகைய நடவடிக்கையை எடுத்து வருகின்றன. இந்நிலையில், ரஷ்ய தூதரக அதிகாரிகள் 10 பேரை வெளியேறச் சொல்லி அண்மையில் ருமேனியா அரசும் உத்தரவிட்டது. இந்தச் சூழலில் தான் ருமேனியாவில் உள்ள ரஷ்ய தூதரகம் மீது இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. (அ)




# வாழைப்பழம் உரிக்கும் ரோபோ

ரோக்கியோ, ஏப். 07

3 நிமிடங்களில் வாழைப்பழத்தை உரிக்கும் ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது. வாழைப்பழத்தை மனிதர்கள் உரிப்பது போன்று இரு கரங்கள் போன்ற பாகங்களுடன் குறித்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது.

ரோபோவுக்கு வாழைப்பழத்தை உரிப்பதற்கு 13மணி நேரம் பயிற்சி அளித்ததாக பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இன்னும் சோதனைக் கட்டத்தில் இந்த ரோபோ உள்ளதாகவும்“ செயற்பாட்டுக்கு வரும் போது உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு மிகவும் பேருதவியாக இருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார். (அ)

# 22 ஆண்டுகளுக்கு முன் திருட்டப்பட்டவை திரும்பக் கிடைத்தன

லண்டன், ஏப். 07

22 ஆண்டுகளுக்கு முன்னர் திருட்டுப்போன விஞ்ஞானி சார்ல்ஸ் டார்வின் எழுதிய குறிப்புகள் திரும்பக்கிடைத்துள்ளன.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்ற பரிணாமக் கொள்கையால் இன்றளவும் புகழ்பெற்றிருப்பவர், விஞ்ஞானி சார்ல்ஸ் டார்வின். இவர் கைப்பட எழுதிய 2 குறிப்புப் புத்தகங்கள், அவர் படித்த இங்கிலாந்து நாட்டில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆனால், அவர் புத்தகங்கள் 22 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கிருந்து திருட்டுப் போய் விட்டன. இது பற்றி பி.பி.சி. சிறப்பு செய்தி வெளியிட்டு, இவற்றை எடுத்தவர்கள் திரும்பத் தந்துவிடுமாறு உலகளாவிய வேண்டுகோளை 15 மாதங்களுக்கு முன்பு விடுத்தது.

இந்நிலையில் அந்த குறிப்புப் புத்தகங்கள், அவை வைக்கப்பட்டிருந்த அசல் நீலப் பெட்டி, வெற்று பழுப்பு நிற உறை ஆகியவற்றை இளஞ்சிவப்பு பரிசுப்பையில் யாரோ கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் விட்டுச்சென்றுள்ளனர். அதை விட்டுச்சென்றவர்கள், அந்த பல்கலைக்கழகத்தின் நூலகருக்கு ஈஸ்டர் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி பல்கலைக்கழக நூலகர் ஜெசிகா கார்ட்னர் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில் - நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளேன். அவை பாதுகாப்பாக உள்ளன. நல்ல நிலையில் இருக்கின்றன. தங்கள் வீட்டில் உள்ளன“ என குறிப்பிட்டார்.

சார்லஸ் டார்வின் பரம்பரை பற்றிய ஓவியத்தை உள்ளடக்கிய இந்த நோட்டு புத்தகங்கள் பல மில்லியன் பவுண்ட் மதிப்பு மிக்கவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ரஷ்யா - உக்ரைன் போர்

# குழந்தைகளின் முதுகில் விவரம் எழுதும் உக்ரைன் தாய்மார்கள்

கீவ், ஏப். 07

குழந்தைகளின் முதுகிலும் உடம்பிலும் தங்களது குடும்ப விவரங்களை உக்ரைன் நாட்டு மக்கள் எழுதி வருகின்றனர். ஒருவேளை ரஷ்யாவின் தாக்குதலில் பெற்றோர் இறந்தால் இந்த விவரங்களைக்கொண்டு அவர்களை அடையாளம் காண உதவும் என அவர்கள் நம்புகின்றனர்.

உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் கடந்த 41 நாட்களாக தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் தலைநகர் கீவ்இ கார்கிவ்போன்ற நகரங்கள் உருக்குலைந்துள்ளன.

இந்நிலையில் உக்ரைன் நாட்டு மக்கள் தங்கள் உடல்களிலும், குழந்தைகளின் முதுகிலும் தங்களது குடும்ப விவரங்கள், தொலைபேசி எண்களை எழுதி வைப்பது தெரியவந்துள்ளது.

இதன்மூலம் தாக்குதலில் தாங்கள் இறந்தாலோ அல்லது குழந்தைகள் அனாதையாக விடப்பட்டாலோ அந்த விவரங்களைக் கொண்டு சிறுவர்களை அடையாளம் காண முடியும் என்று நம்புகின்றனர்.

பெரும்பாலும் குழந்தைகளின் முதுகில் இந்த விவரங்கள் எழுதப்படுவது தெரிய வந்துள்ளது. ஒரு குழந்தையின் முதுகில் குடும்ப விவரங்கள் எழுதப்பட்ட புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அந்தப் புகைப்படத்தை உலகெங்கிலும் உள்ள பத்திரிகையாளர்கள் தங்கள் டுவிட்டர் பக்கங்களில் பகிர்ந்துள்ளனர். (அ)

# தேசிய விளையாட்டுப் பேரவையின் சகல உறுப்பினர்களும் இராஜினாமா

விளையாட்டுத்துறை அமைச்சருக்கு ஆலோசனை வழங்கவும், நாட்டின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கவும் நியமிக்கப்பட்டிருந்த தேசிய விளையாட்டு சபையின் அதிகாரிகள் அனைவரும் தமது பதவிகளை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளதாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் அமல் எதிரிசூரிய தெரிவித்தார்.

தேசிய விளையாட்டு சபையின் தலைவர் மஹேல ஜயவர்தன தலைமையில் திங்கட்கிழமை சூம் தொழில்நுட்ப வசதியின் ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் ஒருமித்த கருத்துடன் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், குழுவின் 14 உறுப்பினர்களில் 10 இற்கும் அதிகமானோர் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்ததாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட தேசிய விளையாட்டுப் பேரவையின் மூன்று வருட பதவி காலம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், இவர்கள் அனைவரும் தத்தம் பதவி நிலைகளிலிருந்து விலகியுள்ளனர்.

விளையாட்டுச் சட்டத்தின் ஒரு கட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஒரு பிரிவுதான் தேசிய விளையாட்டு பேரவை என்றும் அதன் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் என மற்றுமொரு ஷரத்தில் கூறப்பட்டுள்ளதாக விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

“அது ஒன்றும் இல்லை. ஒரு கட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு ஆலோசனை வழங்க ஒரு பிரிவு நியமிக்கப்பட்டது. இது 3 ஆண்டு களுக்கு செல்லுபடியாகும் என்று ஒரு ஷரத்தும் உள்ளது. இது பிரச்சனைக்குரியது. எப்படியோ எல்லோரும் கிளம்பினோம். புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படும் போது, இதே அதிகாரி களையோ அல்லது வேறு சிலரையோ நியமிக்கலாம்.

தாம் விரும்பினால் தேசிய விளையாட்டுப் பேரவையை நியமிக்காதிருக்க விளையாட்டுத் துறை அமைச்சருக்கு உரிமை இருப்பதாகவும் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

மஹேல ஜயவர்தன தலைமையிலான தேசிய விளையாட்டு சபையின் மற்றைய உறுப்பினராகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பணியாற்றினார். இலங்கையின் முன்னாள் டெஸ்ட் அணித்தலைவர் குமார் சங்கக்கார, ஜூலியன் போலின் , டிலந்த மாலகமுவ, ரொவன சமரசிங்க, ரஜித அம்பெமொஹெட்டே, ருவன் கெரகல, சுபுன் வீரசிங்க, யஷ்வரன் முத்தெட்டுவகம, சஞ்சீவ விக்ரமநாயக்க மற்றும் கஸ்தூரி வில்சன் ஆகியோர் ஏனைய அதிகாரிகள் ஆவர்.

நாமல் ராஜபக்ஷ விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்த நிலையில், இலங்கை கிரிக்கெட் தொடர்பாக அவரால் நியமிக்கப்பட்ட கிரிக்கெட் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவும் செயலிழந்துள்ளது.

அரவிந்த டி சில்வா குழுவின் தலைவராகவும், ரொஷான் மஹாநாம, குமார் சங்கக்கார மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாகவும் இருந்தனர்.

தனிப்பட்ட காரணங்களுக்காக ரொஷான் மஹாநாம சில மாதங்களுக்கு முன்னர் குழுவிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டாக்கா பிரீமியர் லீக் தொடரில் குசல் மெண்டிஸ்!



பங்களாதேஷில் நடைபெறவுள்ள டாக்கா பிரீமியர் லீக் தொடரில் விளையாடுவதற்கு இலங்கை கிரிக்கெட் வீரர் குசல் மெண்டிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

50 ஓவர் போட்டியில் பங்கேற்பதற்காக மெண்டிஸ் நாளை வங்கதேசம் செல்கிறார்.

குசல் மெண்டிஸ் டாக்கா பிரீமியர் லீக்கில் மொஹம்மடேடன் விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்த உள்ளார்.

டாக்கா பிரீமியர் லீக்கில் இருந்து நேரடியாக பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியுடன் குசல் மெண்டிஸ் இணையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரேயொரு ரி-20 போட்டியில்

# பாகிஸ்தானை வீழ்த்தி அவுஸ்திரேலியா வெற்றி!



பாகிஸ்தான் அணியுடன் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இருபதுக்கு 20 போட்டியில், அவுஸ்ரேலிய அணி, 3 விக்கட்டுக்களால் வெற்றிபெற்றது.

லாஹூரில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், 163 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய அவுஸ்ரேலிய அணி, 19.1 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

# றோயல் சலஞ்சர்ஸ் அபார வெற்றி



ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிராக மும்பை வான்கடே விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பரபரப்பான ஐ.பி.எல் இருபது 20 கிரிக்கெட் போட்டியில் 5 பந்துகள் மீதமிருக்க 4 விக்கெட்களால் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வெற்றி பெற்றது.

இந்திய அணியின் முன்னாள் வீரர் தினேஷ் கார்த்திக், போட்டி ஒன்றை சிறப்பாக முடித்துக்கொடுக்கக்கூடியவர் என்பதை இந்தப் போட்டியிலும் நிரூபித்தார்.

ராஜஸ்தான் றோயல்ஸினால் நிர்ணயிக்கப்பட்ட 170 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 19.2 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இந்த வெற்றி பெங்களூர் அணிக்கு இலகுவாக அமைந்துவிடவில்லை.

அணித் தலைவர் பவ் டு ப்ளெசிஸ் (29), அனுஜ் ராவத் (26) ஆகிய இருவரும் 7 ஓவர்களில் 55 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ஆனால், 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 5 விக்கெட்களை இழந்த பெங்களூர் 12.3 ஆவது ஓவரில் 87 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது.

அதன் வெற்றிக்கு 45 பந்துகளில் மேலும் 83 ஓட்டங்கள் தேவைப்பட்டதால் அவ்வணி பெரும் சிரமத்தை எதிர்கொண்டது.

இந் நிலையில் ஷாபாஸ் அஹ்மதுடன் 7ஆம் இலக்க வீரராக இணைந்த தினேஷ் கார்த்திக் 6ஆவது விக்கெட்டில் 32 பந்துகளில் 67 ஓட்டங்களைப் பகிர்ந்து பெங்களூர் அணிக்கு நம்பிக்கை ஊட்டினர்.

கடைசி 2 ஓவர்களில் வெற்றிக்கு மேலும் தேவைப்பட்ட 12 ஓட்டங்களை 7 பந்துகளில் கார்த்திக்கும் ஹர்ஷால் பட்டேலும் பெற்றுக்கொடுத்து, இவ் வருட ஐ.பி.எல் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை முதல் தடவையாக தோல்வி அடையச் செய்தனர்.

36 வயதுடைய கார்த்திக் 23 பந்துகளில் 7 பவுண்ட்றிகள், ஒரு சிக்ஸூடன் 44 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். பட்டேல் ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்களைப் பெற்றார்.

ராஜஸ்தான் பந்துவீச்சில் யுஸ்வேந்த்ர சஹால் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ட்ரென்ட் போல்ட் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் வீழ்த்தனர்.

முன்னதாக இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

மொத்த எண்ணிக்கை 2ஆவது ஓவரில் 6 ஓட்டங்களாக இருந்தபோது யஷஸ்வி ஜஸ்வால் (4) ஆட்டமிழந்தபோதிலும் ஜொஸ் பட்லர், தேவ்தத் படிக்கல், ஷிம்ரன் ஹெட்மியர் ஆகியோர் திறமையாகத் துடுப்பெடுத்தாடி அணியை கௌரவமான நிலையில் இட்டனர்.

மும்பை இண்டியன்ஸூடனான போட்டியில் சதம் குவித்த ஜொஸ் பட்லர். இந்தப் போட்டியிலும் திறமையாக துடுப்பெடுத்தாடி கடைசிவரை ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களைக் குவித்தார்.

40 பந்துகளை எதிர்கொண்ட பட்லர் 6 சிக்ஸ்களை விளாசியபோதிலும் ஒரு பவுண்ட்றியையும் அடிக்கவில்லை.

37 ஓட்டங்களைப் பெற்ற படிக்கல்லுடன் 2ஆவது விக்கெட்டில் 70 ஓட்டங்களைப் பகிர்ந்த ஜொஸ் பட்லர், பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் ஷிம்ரன் ஹெட்மியருடன் மேலும் 83 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

ஷிம்ரன் ஹெட்மியர் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார், இதனிடையே அணித் தலைவர் சஞ்சு செம்சன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

பந்துவீச்சில ஹர்ஷல் பட்டேல் 18 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் டேவிட் வில்லி 29 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் வனிந்து ஹசரங்க டி சில்வா 32 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# வாக்களித்த 69 லட்சம் பேர் இன்று அரசுடன் இல்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக 69 லட்சம் வாக்குகளை வழங்கிய மக்களின் பெரும்பான்மையான வர்கள், அவரை வீட்டுக்குச் செல்லுமாறு கோரி வீதியில் இறங்கிப்போராடி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு ஆதரவாக 69 லட்சம் மக்கள் இருப்பதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினாலும் அரசாங்கத்துக்கு ஆதரவாக 69 லட்சம் மக்கள் அல்ல 9 பேர் கூட இல்லை எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பாராளுமன்றம் தரப் போகும் தீர்வு என்ன என்பதை நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ளனர். ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டரை ஆண்டுகளாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எத்தனை முறை எடுத்துக் கூறியும் செவி கொடுக்காத காரணத்தினாலேயே நாட்டு மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர்.

தற்போது நாட்டில் இருக்கும் பிரச்னை என்ன என்று நீங்கள் எங்களிடம் கேட்கின்றீர்கள். நாங்கள் இரண்டரை ஆண்டுகளாக கூறினோம், நீங்களும் கூறினீர்கள்( ஆளும் கட்சியினர்) ஐந்து சதத்திற்கும் பொருட்படுத்தவில்லை.

அமைச்சர்களும் கூறினர், அமைச்சர்கள் பதவி விலகினர். பொருட்படுத்தவில்லை. இதன் காரணமாகவே நாட்டின் 220 லட்சம் மக்கள் கோட்டா வீட்டுக்கு போ என்று சொல்கின்றனர்.

வீதியில் செல்லும் வாகனங்களிலும் கோட்டா கோ ஹோம்(Gota Go Home) என்று வாசகத்தை காட்சிப்படுத்தியுள்ளனர். அச்சமின்றி மக்கள் வெளியில் இறங்கியுள்ளனர். இதுதான் உண்மை.

கோட்டா வீட்டுக்கு போ, ராஜபக்ஷவினர் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர். அதற்கு தீர்வை பெற்றுக்கொடுங்கள். ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்திற்கு வந்து இந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும் என்று கூற இயலும்.

பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றார். ஏன் பாராளுமன்றத்திடம் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும்? பதவி விலகுவது ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது. ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்றே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனை செய்யாது வேடிக்கை பாரத்துக்கொண்டிருக்கின்றீர்கள்.

69 லட்சம் மக்கள் தமக்கு இருப்பதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார். 69 லட்சம் அல்ல, 9 பேரை கூட தற்போது தேடிக்கொள்ள முடியாது. 69 லட்சம் மக்களின் பெரும்பான்மையானவர்கள் கோட்டா வீட்டுக்கு போ என்று கோஷமிட்டவாறு வீதியில் இருக்கின்றனர்.

இவற்றை புரிந்துக்கொள்ளுங்கள். இவற்றை புரிந்து கொள்ளாது எப்படி தீர்வுகளை வழங்க முடியும். நீங்கள்(ஆளும் கட்சியினர்) இந்த உலகத்திலா இருக்கின்றீர்கள்?. உங்களுக்கு போன்று எங்களுக்கும் பிள்ளைகள் உள்ளனர்.

எமது பிள்ளைகளும் இந்த நாட்டில் வாழ வேண்டும். இந்த நாட்டில் வாழும் நீங்கள் (ஆளும் கட்சியினர்) இந்த பாவத்தை செய்யவேண்டாம். நாட்டை அழித்து இன்னும் ஆடைகளை அணிந்து கொண்டா இருக்கின்றீர்கள்?. கோட்டாபய ராஜபக்ஷ ஆடை அணிந்தா இருக்கின்றார்?.

தயவு செய்து வீட்டுக்கு செல்லுங்கள், இந்த நாட்டுக்கு தீர்வை பெற்றுக்கொடுங்கள் - என்றார். (அ)

# பாடசாலை நேரத்தை அதிகரிக்கவேண்டாம்

## கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 07

நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் பாடசாலை நேரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதோ அல்லது அதிகரிப்பதோ பொருத்தமானது அல்ல.

-இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

போக்குவரத்து கட்டண அதிகரிப்பு உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு எனும் மோசமான சூழ்நிலைகளுக்காக மக்கள் பேதமின்றி வீதியில் இறங்கிப் போராடிவருகின்றனர்.

இதில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஏன் மாணவர்களும் இணைந்துள்ளனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில் பாடசாலையை அரை மணி நேரம் அதிகரிப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதவொன்று.

ஒரு காலத்தில் இரு நேரப் பாடசாலையாக நடைபெற்றபோது மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர்.

அதன் பின்னர் மாணவர்களுக்கான சத்துணவு, மதிய உணவு என்பன வழங்கப்பட்டன.

இப்போது எல்லாமே நிறுத்தப்பட்டு விலைவாசியை பன் மடங்காக அதிகரித்து மக்களை சித்திரவதை செய்து. ஏதோ மாணவர்களின் கல்வியில் அக்கறை உள்ளவர்கள்போல் பாசாங்கு செய்வது வேடிக்கையாக உள்ளது.

இவை எவையுமே இலங்கை நாட்டில் சாத்தியப்படாது என்பதனை கோடிக்கணக்கான மக்களும் உணர்ந்துவிட்டனர்.

ஆகையால் பாடசாலை நேரத்தை அதிகரிக்கும் திட்டத்தை நிறுத்தி போசாக்கான சமூகம் உருவாக வழிவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்று கூறப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதார வளர்ச்சி 2.4 வீதமாக குறையும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 07

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 2.4 வீதக குறையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.

இது கடந்த ஆண்டை விட 1.3 சதவீதம் சரிவாகும். 2021 இல், இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.7 சதவீதமாக இருந்தது.

கடன்கள், குறைந்த வெளிநாட்டு கையிருப்பு மற்றும் கொரோனா தொற்று ஆகியவை வீழ்ச்சிக்கு காரணம் என கூறப்படுகின்றது.

இதேவேளை அடுத்த ஆண்டில் 2.5 வீதமாக சிறிதளவு முன்னேற்றம் காணும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஆர்ப்பாட்டங்களில் சிறுவரை ஈடுபடுத்து பொருத்தமற்றது

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

கொழும்பு, ஏப்..07

பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவதை தவிர்க்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அனைத்து தரப்பினரையும் கோரியுள்ளது.

தற்போதைய நாட்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய போராட்டங்களுக்கு சிலர் குழந்தைகளையும் தூக்கிச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

இது பொருத்தமற்ற செயற்பாடாகும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
06 - 12 - 1955



**மறைவு**
02 - 04 - 2022

## திருமதி எட்மன் ஸ்ரெலின் (சிபில்)

யாழ். பாஷையூரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Aulnay - sous - Bois ஐ வதிவிடமாகவும் கொண்ட எட்மன் ஸ்ரெலின் கடந்த 02-04-2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - பிலோமினா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குருசு முத்து - திரேசம்மா தம்பதிகளின் மருமகளும், குருசுமுத்து எட்மனின் (இராஜசேகரம்) அன்பு மனைவியும், தமிழினி, ஸ்ரெபனி, குளோடியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஒலி நெற், கொலம்ஸ்சன், மிதுன் ஆகியோரின் அன்பு மாமியும், கொண்சாலஸ், யஸ்ரின், எவலின் (நிலா), காலஞ்சென்ற ஜெய லின், பெலஸ்ரின், கொட்வின் ஆகியோரின் அன்புச் சகோதரி யும்,மேரிறாணி, மரியறாணி, மிக்கேலம்மா, றொற்றிக்கோ ஆகியோரின் மைத்துனியும்,பியோனா, லோறா, புளோறா, கிலி யான் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

**Viewing Bus Route:**
RER B : SEVRAN BEAUDOTTES
BUS 1, 15, 609
ARRÊT : ROUTE DE SEVRAN
BUS 1 : Direction -> VILLEPARISIS
BUS 15 : Direction -> JAURES
BUS 609 : Direction -> VILLEPINTE
**Mass Bus Route:**
RER B Gare Sevran Livry
**Burial Bus Route:**
BUS 43 direction aéroport cdg
Arrêt lycée voillaume ou savigny

பார்வைக்கு :
Wednesday, 06 Apr 2022 4:00 PM - 5:00 PM
Thursday, 07 Apr 2022 4:00 PM - 5:00 PM
Friday, 08 Apr 2022 4:00 PM - 5:00 PM
Funérarium. 83 Bd Robert Ballanger, 93420 Villepinte, France

திருப்பலி
Saturday, 09 Apr 2022 9:30 AM
église Saint-Martin de Sevran 13bis Rue Lucien Sampaix, 93270 Sevran, France

நல்லடக்கம் :
Saturday, 09 Apr 2022 11:00 AM - 12:00 PM
Nouveau Cimetière 154 Rue de Mitry, 93600 Aulnay-sous-Bois France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**இராஜசேகரம் - கணவர்**
**Mobile : +33664831293**
**ஒலிநெற் - மருமகன்**
**Mobile : +33767811099**
**கொண்சாலஸ் - சகோதரன்**
**Mobile : +33610129083**
**யஸ்ரின் - சகோதரன்**
**Mobile : +94772485029**
**நிலா - சகோதரி**
**Mobile : +94770398291**
**பெலஸ்ரின் - சகோதரி**
**Mobile : +33626204631**
**கொட்வின் - சகோதரன்**
**Mobile : +33651136069**
**தமிழினி - மகள்**
**Mobile : +33666501795**
**ஸ்ரெபனி - மகள்**
**Mobile : +33627439922**
**குளோடியா - மகள்**
**Mobile : +33763031711**
**கொலம்ஸ்சன் - மருமகன்**
**Mobile : +33753030880**
**மிதுன் - மருமகன்**
**Mobile : +33618290629**

தகவல்:
**குடும்பத்தினர்**

## நெருக்கடி...

கில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, உலக வங்கியின் முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணர் சாந்தா தேவராஜன், சர்வதேச நாணய நிதியத்தின் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் ஷர்மினி கூரே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புபட்டுள்ள இலங்கையின் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தல், தற்போதைய கடன் நெருக்கடிக்குத் தீர்வுகாணல் மற்றும் இலங்கையின் நிலையான மீட்சிக்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குதல் என்பன ஆலோசனைக் குழுவின் பொறுப்புக்களாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹர்ஷ டி...

தற்காலிகமாக ஜனாதிபதியாக்குவோம் எனவும் அவர் குறிப்பிட் டார்.

பாராளுமன் றில் நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பாராளுமன்றில் எத்தனையோ நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் 225 உறுப்பினர்களையும் மக்கள் வெறுக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன? இதுதான் இந்த நாட்டின் நிலைமை.

ஒரு வருடத்துக்கு எனக்கு சம்பளம் வேண்டாம். பாராளுமன்றில் உள்ள உணவகத்தில் நான் உணவு உட்கொள்ள மாட்டேன். அனைத்து எம்.பிக்களுக்கும் இவ்வாறு கூற முடியுமா

நாடு இப்போது பாரிய பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ கௌரவமாக பதவி விலக வேண்டும். மக்களும் அதையே கோருகிறார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொருளாதாரம் தொடர்பில் நன்கு கற்ற ஹர்ஷ டி சில்வாவை தற்காலிகமாக ஜனாதிபதியாக்குவோம். அவருக்கு தெரியும் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு தீர்க்க வேண்டுமென்பது. அதை விட்டு விட்டு பதவிக்காகவோ, தேர்தலுக்காகவோ போட்டியிடவேண்டிய நேரம் இது இல்லை.

அப்படி இல்லையென்றால், மக்கள் விடுதலை முன்னணியாவது ஒரு அணியாக திரட்டிக்கொண்டு தற்காலிகமாக அரசை பொறுப்பேற்று செய்து காட்டுவதற்கு வாய்ப்பளிப்போம் - என்றார். (அ)

## 40 மருந்து...

முதல் ஒரு மாதத்திற்கே போதுமானதாக உள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

நாட்டில் மருந்துப்பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்திய கடன் வசதியின் கீழ், மருந்துகளை இறக்குமதி செய்வோருக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர இலங்கை வங்கியூடாக 7 மில்லியன் டொலர் மற்றும் மக்கள் வங்கியூடாக 7 மில்லியன் டொலர் கடன் கடிதத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிலைமையை சமாளிப்பதற்கு மேலும் 20 மில்லியன் டொலர் நிதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் சமன் ரத்நாயக்க சுட்டிக் காட்டினார். (அ)

## ஆர்ப்பாட்டங்களை...

தரவு, சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டமை மற்றும் போராட்டக்காரர்கள் மீதான தேவை யற்ற வன்முறைகள் குறித்தும் தமக்கு செய்திகள் கிடைத்ததாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் எதிர்ப்புப் போராட்டம் அல்லது கருத்து சுதந்திரத்திற்கு எதிராக அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தக்கூடாது என்றும் தற்போதைய நிலைமைகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

## இந்தியாவிட...

தொன் பெற்றோல் மற்றும் 40,000 மெற்றிக் டீசல் நேற்று முன் தினமும் நேற்றும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்திய கடன் எல்லை வசதியின் கீழ் இதுவரையில், 270,000 மெற்றிக் தொன் எரிபொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

## அவசரகால...

திரக்கட்சி அரசுடன் இருப்பதையே அவர் விரும்புகின்றார். ஆனால் எமக்கு ஏற்பட்டுள்ள நிலை மற்றும் மக்களின் நிலைப்பாட்டை நாம் தெளிவுபடுத்தினோம்.

அத்துடன், அவசரகால சட்டத்தை நீக்குமாறும் கோரினோம். அந்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுள்ளார். அவசரகாலஸ் சட்டம் நீக்கப்பட்டமை எமக்கு கிடைத்த வெற்றியாகும். நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவோம். சுயாதீனமாக செயற்பட முடிவெடுத்துள்ள ஏனைய இரு அணிகளையும் கைவிடமாட்டோம்-என்றார். (அ)

## சட்டமா...

பெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

" நாட்டின் சட்டவாட்சி தொடர்பில் தற்போது பாரிய சிக்கல் நிலை உருவாகியுள்ளது. சட்டத்தரணிகள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர்.

காட்டுச் சட்டங்கள் ஊடாக நாட்டின் ஜனநாயகத்தை சீரழிக்க சட்டத்தரணிகள் எதிர்பார்க்கவில்லை, மல்வானை வழக்கில் கிடைத்துள்ள ஆதாரங்களை சட்டமா அதிபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவில்லை . அவ்வாறாயின், பிரதிவாதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

சட்ட மா அதிபர் திணைக்களம் அரசியல்மயமாக்கப்பட்டுவிட்டது. இதே போன்று சட்ட மா அதிபர் தொடர்ச்சியாக செயற்பட்டால் அவருக்கு எதிராக குற்றப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அவரை பதவி நீக்குவோம் என்பதை இங்கு கூற விரும்புகின்றேன்" - என்றார். (அ)

## கடும் உணவு...

னர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகளை பாதுகாப்பவர் என்ற வகையில் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக ஜனநாயக ரீதியில் தீர்வு காண முடியும் என தெரிவித்த சபாநாயகர், இந்த வார இறுதிக்குள் அரசியலமைப்பின் பிரகாரம் இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கான பொதுவான திட்டத்தை வகுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார். (அ)

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில் பெண்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு, ஏப். 07

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள் கள் விலையேற்றம் உட்பட பல் வேறு கோரிக்கைகளை முன் வைத்து மட்டக்களப்பில் பெண்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள்களின் விலை அதிகரிப்பினால் பெண்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாக தெரிவித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி பெண்கள் ஒன்றியத்தினால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொருள்களின் விலை அதிகரிப்பினால் வடக்கு-கிழக்கில் பெண்கள் எதிர் நோக்கிவரும் நெருக்கடிகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் எரிவாயு விலையேற்றம் பால்மா மற்றும் எரிபொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களின் விலையேற்றத்தினால் தினமும் பெண்கள் பாதிக்கப்படுவது குறித்தான கண்டன கோசங்களும் எழுப்பப்பட்டன. (அ)

# சாய்ந்தமருதில் தொடர்கிறது அரசுக்கு எதிரான போராட்டம்

அம்பாறை, ஏப். 07

நாட்டின் பெருளா தார நிலைமை வீழ்ச்சி யடைந்து மக் களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஸ்டத்திற்குள்ளான நிலையில் தற்போதிருக்கும் அரசாங்கத் திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு எதிராக நாட்டின் பல் வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் இரண்டாவது நாளாக நேற்று இரவும் தேசிய கொடியை ஏந்திக்கொண்டு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பிரதான வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நிறைய இளைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு வீட்டுக்கும் கேடு நாட்டுக்கும் கேடு கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு, பச்சிளம் குழந்தைகளை கொன்ற கோட்டாவே வெளியேறு, மொட்டின் முட்டுக்கள் கழருங்கள், அடுத்து நாட்டை விட்டு வெளியேர போவது யார், ஆட்சி செய்து கிழித்தது போதும், குடும்ப ஆட்சி வேரோடு ஒழிக, பெற்றோல் இல்லை டீசல் இல்லை கோட்டாவுக்கு அறிவும் இல்லை, கோட்டா சேர் தயவு செய்து போங்க சேர், வெந்தது நாடு கோட்டாவ தூக்கி வெளியில் போடு, பொருளாதார நெருக்கடி இரவெல்லாம் கொசுக்கடி, பசிலே வெளியேறு போன்ற கோசங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டங்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் அதனை கட்டுப்படுத்தும் வேலைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்ததுடன் பாது காப்பு கடமையிலும் ஈடுபட்டிருந்தமையை காண முடிந்தது. (அ)

# பிச்சை எடுக்கிறது கோட்டாபய அரசு

## அஸாத் சாலி குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 07

ஆட்சிக்கு வந்து மூன்று வருடமாகியும் எதுவும் செய்யமுடியவில்லை, அரசு இங்கே முழுக்க முழுக்க பிச்சை எடுக்கிறது என முன்னாள் மேல் மாகாண ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019ஆம் ஆண்டு மொட்டுக்கட்சி ஆரம்பமானது. இந்த கட்சியை எவ்வாறு பிரபலப்படுத்துவது என்பதே தற்போதைய அரசின் அன்றைய மன நிலை.

அப்பொழுது நல்லாட்சி அரசு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியது. பொருட்களின் விலை குறைவு உட்பட மக்களிடம் பணமும் இருந்தது. காசு அச்சிடவுமில்லை.

அப்படி இருக்கும் போது மொட்டுக் கட்சியை நிலைநாட்ட மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோருடன் சேர்ந்து உடைய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ முனைந்தார்கள்.

இவர்களின் நோக்கமே முஸ்லிம் களுக்கு எதிராகச் சிங்கள மக்களை வெறியுண்டாக்கி, சிங்கள மக்களை வாக்களிக்க செய்து மொட்டுக் கட்சியை நிலைநிறுத்தப் பாடுபட்டு ஜனாதிபதி தேர்தலை நடத்தினர்.

ஆனால் அரசு ஆட்சிக்கு வந்து மூன்று வருடமாகியும் எதுவும் செய்ய முடியவில்லை, அரசு இங்கே முழுக்க முழுக்க பிச்சை எடுக்கிறது-என்றார்.

## ஜோன்ஸ்டனின்...

முன்னதாக போராட்டக்காரர்களுக்கு சவால் விடுவதை போல குருநாகல் மேயர் ஆதரவாளர்களை திரட்டி கூட்டம் நடத்திய போதும், போரணி நகர்ந்து அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோவின் அலுவலகத்தை சுற்றிவளைத்தது. (அ)

ஈழநாடு
Eelanadu

## அரச ஊழியர்களின் ஏப்ரல் சம்பளத்தில் தடையில்லை

கொழும்பு, ஏப். 07

தற்போதைய சூழ்நிலையில் அரச சேவை, ஊழியர்களுக்கான ஏப்ரல் மாதத்துக்குரிய சம்பளத்தை வழங்குவதில் எவ்வித தடையும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு இதனை தெரிவித்துள்ளது.

எனவே, வழமை போல எவ்வித மாற்றமும் இன்றி இம்மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படும் என்றும் அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம்
13 - 04 - 1972

மறைவு
04 - 04 - 2022

### தர்மராஜா பாக்கியநாதன் (தம்பி)

யாழ். புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Mammern ஐ வதிவிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராஜா பாக்கியநாதன் அவர்கள் 04.04.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பாக்கியநாதன் – வரலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா – வல்லினாவல்லி தம்பதிகளின் அன்பு மருமகனும், கிளிநொச்சியைச் சேர்ந்த றஞ்சிதமலர்(பாமா) அவர்களின் ஆருயிர்க் கணவரும்,சாறுகா, சரண் ஆகியோரின் அருமை தந்தையும், வனஜா(சுவிஸ்), பிறேமலதா (ஜேர்மனி), யுவர்ஷினி (ஜேர்மனி), சசிகாந்தன்(கனடா), விஜயகாந்தன்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதர ரும், மதிரூபன்(சுவிஸ்), தவச்செல்வன்(ஜேர்மனி), நந்தகுமார்(ஜேர்மனி), கவிதா, சுதனிகா(கனடா) மற்றும் இராஜமலர்(சுவிஸ்), ஜீவன்(சுவிஸ்), யோகநாதன் (கனடா), கௌரிமலர்(லண்டன்), ஜெயமலர்(ஜேர்மனி), யோகமலர் (சுவிஸ்), புஸ்பமலர்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குகாநந்தன்(சுவிஸ்), கிரு பாலினி (சுவிஸ்), அனுசியா(கனடா), சத்தியசீலன் (லண்டன்), சிவகுமார் (ஜேர்மனி), ராசரத்தினம் (சுவிஸ்), நகுலேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும்,ரூபிதா, தீபன், சானா, சர்வின், வைஸ்னவி, அஸ்வின், ஆகர்சன், சஞ்ஜெய், சகானா, அனோசியா, அனுஷ், அக்சையா ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,சுபாசினி, சுதர்சினி, சிந்துஜா, கீதாஞ்சலி, ஹரிஸ், றாகுல் ஆகியோரின் அன்புச் சித் தப்பாவும், ரிஷி, ஷன்னியகா, நிக்காஷ், சசிகா, சஞ்ஜீவ், விஜிஷ்னா, அச்சனா, ஆருசன், மாதுளன், நட்சத்திரா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
விசி - சகோதரன்
Mobile : +16479732255

தகவல்:
குடும்பத்தினர்

## லிப்டன் சுற்று வட்டத்தில் போராட்டம்




கொழும்பு, ஏப்.07

கொழும்பு - லிப்டன் சுற்றுவட்ட பகுதியில் இளைஞர் யுவதிகள் பலரும் இணைந்து அரசுக்கு எதிரான போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

அரசுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியபடி இப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக அரசுக்கெதிராக பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசுக்கு எதிராக இன்று தலவாக்கலையில் களமிறங்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி!

கொழும்பு, ஏப். 07

“மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளாத அரசாங்கத்திற்கு எதிராக தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்பாடு செய்துள்ள கண்டன பேரணி இன்று முற்பகல் 10 மணிக்கு தலவாக்கலை நகரில் இடம்பெறவுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்டன பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச உட்பட முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்தார். (அ)

### புத்தாண்டை முன்னிட்டு

## விசேட ரயில் சேவை முன்னெடுக்கவில்லை

### ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.07

புத்தாண்டை முன்னிட்டு இம்முறை விசேட ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கு ரயில் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையென ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வழமையாக புத்தாண்டு காலப்பகுதியில் கொழும்பு மத்திய பஸ் நிலையம் மற்றும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பல்வேறு பிரதேசங்களுக்கு விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும்.

எனினும், இம்முறை பல்வேறு காரணங்களை முன் வைத்து ரயில் சேவைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்படவில்லை.

எரிபொருள் நெருக்கடியின் காரணமாக, சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் எண்ணிக்கை குறைந்துள்ள இத்தகைய சந்தர்ப்பத்தில் மாற்று வழியாக பெரும்பாலான பயணிகள், ரயில் சேவையை நாடுகின்றன.

இதனால் ரயிலில் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே, புத்தாண்டு காலத்தில் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்க ஆலோசனை வழங்குமாறு ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)







## மின்சார சபை ஊழியர்கள் அரசை எதிர்த்து போராட்டம்!

வவுனியா, ஏப். 07

வவுனியா ஊழியர்கள் இன்று அரசுக் கெதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று புதன்கிழமை மதியம் 12 மணிக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பிரதம மின் பொறியிலாளர் அலுவலகத்திற்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சுமார் அரை மணி நேரமாக குறித்த அலுவலத்திற்கு முன்பாக போராட்டம் இடம்பெற்ற பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பூங்கா வீதியூடாக புகையிரத நிலைய வீதியை சென்றடைந்து அங்கிருந்து மணிக்கூட்டுகோபுரத்தை சென்றடைந்தனர்.

மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து ஏ-9 வீதியை தடை ஏற்படுத்தி ஆர்ப் பாட்டக்காரர்கள் பழைய பஸ் நிலையத் தினை சென்றடைந்தமையால் ஏ-9 வீதியில் சில மணி நேர போக்குவரத்து தடை ஏற்பட்டிருந்தது.

சுமார் 2 மணி நேரத்திற்கும் அதிக மாக இடம்பெற்ற இந்த போராட்டத் தில் ஜனாதிபதிக்கு எதிரான கோசங்களை எழுப்பியிருந்ததுடன் எரிவாயு இன்மை, மின்சார மின்மை, எரிபொருள் இன்மை, மின்சார வழங்கலை விற்பனை செய்யாதே போன்ற வாசகங்கள் எழுத்தி பதாதைகளை தங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.